Registered at the G. P. O. as a Newspaper வாரப் பதிப்பு விலை சதம் 15

# ஈழநாடு

தேசிய தினசரி National Tamil Daily

போன் 189 தபாற் பெட்டி எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி மார்கழி 20ஆம் நாள் ஷஃபான் பிறை 29 (3-1-65) ஞாயிற்றுக்கிழமை இதழ் 325

இனி இனிம் இனிம்
"மில்க்வைற் நீல சோப்"
பாவிப்பாளருக்கு பெரு அதிர்ஷ்டம்
எங்கள் சோப்பின் உறைகளைச் சேமியுங்கள்
50 உறைகளுக்கு
அழகான—கவர்ச்சியான - உறுதியான
"மார்க்கெட்டிங் பாக்"
இனமாக உங்களுக்கு கிடைக்கும்.
எங்கள் காரியாலயத்தில் அல்லது விற்பனை வானில் உறைகளைக் கொடுத்து பரிசைப் பெறலாம்.

# இந்திய அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சி ?

## சீன ஆதரவுடனான புரட்சிதிட்டம் குறித்து திரு. நந்தா குற்றச்சாட்டு

### "உடன் நடவடிக்கை எடுத்திராவிடின் பெரும் அபாயம் ஏற்பட்டிருக்கும்"

புதுடில்லி, ஜனவரி 2

மற்றுமொரு சீனத்தாக்குதல் ஏற்படும்பொழுது ஆயுதப் புரட்சியொன்றை உள் நாட்டில் நடத்தி ஜனநாயக இந்திய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு தயார் செய்துவந்தகாரணத்தினால் தான் கம்யூனிஸ்ட் கட்சியின் இடதுசாரித் தலைவர்கள் கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டனர் என்று இந்திய உள்துறை மந்திரி திரு. குல்ஸாரிலால் நந்தா இன்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

600-க்கும் அதிகமான இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டது குறித்து திரு குல்சாரில்லால் நந்தா விபரமான அறிக்கையொன்றுவெளியிட்டுள்ளார்.

"2 மாதங்களுக்கு முன்னர் கல்கத்தாவில்நடைபெற்ற கம்யூனிஸ்ட்கட்சி மகாநாட்டில் பல தீவிரமான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன புதியதொரு சீனத்தாக்குதல் ஏற்படும் பொழுது இவர்கள், இங்குள்ள சாதாரண ஊழியர்களைக் கொண்டு ஆயுதப்புரட்சியையும் கொரில்லாப்புரட்சியையும் நடத்தத் திட்டமிட்டிருந்தனர் இப்படியான புரட்சி நடத்தி ஜனநாயக இந்திய அரசாங்கத்தைக் கவிழ்க்க அவர்கள்

(10-ம் பக்கம் பார்க்க)

## அயூப் மீண்டும் பாக். ஜனாதிபதி



ராவல்பிண்டி, ஜன. 2

இன்று நடைபெற்ற பாகிஸ்தான் ஜனாதிபதி தேர்தலில் பீல்ட் மார்ஷல் அயூப்கான் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் தம்முடன் போட்டியிட்ட மிஸ் பாத்திமா ஜின்னாவைவிட 20,000 அதிகபடியான வாக்குகளை பெற்றார்.

ஜின்னாவின் சகோதரியான பாத்திமா ஜின்னாவுக்கு 24,000வாக்குகள் கிடைத்தன.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற பீல்ட் மார்ஷல் அயூப்கான் நாட்டு மக்களுக்கு இன்று இரவு விடுத்தசெய்தியில் பசி வறுமை இவற்றை நாட்டிலிருந்து ஒழிக்கத் தாம் திடசித்தம் கொண்டுள்ளதாகவும் இதற்கு ஒவ்வொரு பிரஜையும் தமக்கு ஒத்துழைப்புத் தருமாறு வேண்டினார்.

[illegible] மிஸ் ஜின்னா மீது தமக்கு எவ்வித [illegible] மில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

ராதா குரு பற்பொடி




பற்களை வெண்மையாக்கி, வாய் நாற்றத்தைப் போக்கி, பற்களுக்கு பூரணமான பாதுகாப்பளிக்கிறது. பல்வலி, பல்அரணை, முரசு கரைதல் முதலிய பல் சம்பந்தமான நோய்களுக்கு நிவாரணமளிக்கும்.

தயாரிப்பாளர்கள்: ராதா புறடக்ஸ்

விநியோகஸ்தர்கள்: போன்: 541
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, கே.கே.எஸ்.றேட், யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு.

பாத்திரங்கள் வாங்கும் பொழுது
டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:
அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்.

# ரத்ததானம்செய்து நிதிக்கு உதவி

## 'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதிக்குழு நியமனம்

சூறாவளியின் கோரத்தாண்டவத்தினால் உற்றார் உறவினரையும் வீடுவாசல்களையும், பொருள்பண்டங்களையும் இழந்து ஒரே இரவில் அனாதைகளாகி திக்கற்றவராகி நிற்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உதவி செய்யும்பொருட்டு மக்கள் பணியே தன் பணியெனக் கொண்டுள்ள 'ஈழநாடு' ஆரம்பித்துள்ள சூறாவளி கஷ்ட நிவாரண நிதிக்கு அன்பர்கள் பலர் தம்மாலியன்ற அளவுக்கு உதவியளித்து வருகின்றனர். எப்படி உதவி செய்வோம் என்று தவித்துக்கொண்டிருந்த பலர் 'ஈழநாடு' நிதி ஆரம்பித்துள்ளதையறிந்து மகிழ்ந்து தமது பங்கை செலுத்திவருகின்றனர் வவனியா பசார் வீதி பதின் மூன்றும் இலக்கத்தில் வசிக்கும் க. கனகராயசம் என்பவர் ஈழநாடு சூறாவளி நிவாரண நிதிக்கு பத்து ரூபாய் அனுப்பியிருக்கிறார். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளிக்கு தமது இரத்தத்தில் ஒரு பகுதியை தானம் செய்து அதன் மூலம் கிடைத்த பத்து ரூபாயை சூறாவளியால் கஷ்டப்படும் மக்களுக்கு உதவும்பொருட்டு அவர் அனுப்பியிருக்கிறார், பத்து ரூபாவையும் அவர் பணமாக் அனுப்பவில்லை. ஆஸ்பத்திரியில் கொடுக்கப்பட்ட சிட்டையையே அனுப்பியுள்ளார். "புயல் நிவாரண நிதிக்கு என்னால் இந்த உதவிதான் செய்யமுடிந்தது" என்று அவர் எழுதியிருப்பது உள்ளத்தைத்தொடுகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வைத்தியர்களில் ஒருவரான டாக்டர் எஸ். சோமசுந்தரம் 200 ரூபா வழங்கியுள்ளார். இந்த அன்பர்களின் முன்மாதிரியை மற்றவர்களும் பின்பற்றி கஷ்டமுறும் மக்களுக்குப் புனர்வாழ்வளிக்க உதவிபுரிவார்களென நம்புகிறோம்.

## நிவாரண நிதிஉதவிச்சபை

வேறு பல ஸ்தாபனங்களும் அரசாங்கமும் சூறாவளி கஷ்ட நிவாரண நிதி ஆரம்பித்திருக்கின்றன 'ஈழநாடு'ம் ஆரம்பித்திருக்கிறது. எப்படி இந்த நிதியை பாதிக்கப்பட்ட மக்களுக்கு பயன்படச் செய்யப்போகிறீர்கள்? என்று சிலர் கேட்கின்றனர். தர்மசிந்தையுள்ள அன்பர்கள் வழங்கிய நன்கொடையில் ஒரு சதம் கூட தவறாகவோ, வீணாகவோ போகாமல் துன்பமுறும் மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்பதில் 'ஈழநாடு' சிரத்தை கொண்டுள்ளது. சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் உண்மை நிலையை ஆராய்ந்து அறிந்து அவர்களுக்கு இதர இடங்களிலிருந்து எவ்வித நிவாரண உதவிகள் கிடைத்துள்ளனவென்பதையும் அறிந்து அவரவருக்கேற்றவகையில் உதவியளிக்கப்படும். இந்த உதவி சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஈழநாடு சூறாவளி கஷ்ட நிவாரண நிதிக்குழு அமைப்பாளர்களான 'ஈழநாடு' நிர்வாக ஆசிரியர் திரு. கே. பி. ஹரன், யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்க நிர்வாகியும் முன்னாள் வைத்திய அத்தியட்சகருமான டாக்டர் கே. கனகரத்தினம், சேகரம் அன் சன்ஸ் அதிபர் திரு. வி. இராஜசேகரம், வழக்கறிஞர் திரு. எஸ். சூரசங்காரம், யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்க மானேஜிங் டைரக்டரும் முன்னாள் ரயில்வே ஜெனரல் மனேஜருமான திரு. எம். கனகசபை, ஓட்டோஸ் லிமிட்டெட் அதிபர் திரு. என். குமாரசாமி, வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன், யாழ்ப்பாணம் மெர்கன்டைல் வங்கி பிரதம சிறுப்பர் திரு. எஸ். ஜெகநாதன் ஆகியோர் நிவாரண உதவிச்சபையொன்றை நிறுவுவர்.

பணம் அனுப்பவிரும்புவோர்:

"புயல் கஷ்டநிவாரண நிதி"

"ஈழநாடு", த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்

என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். வசூல் விவரங்களை அவ்வப்போது பத்திரிகையில் வெளியிடுவோம்.

நேற்று நண்பகல்வரை கிடைத்த மொத்தத் தொகை ரூபாய் 8073—25சதம்

| | |
|---|---|
| எஸ். எஸ். பொன்னுத்துரை யாழ்ப்பாணம் | 2 |
| எஸ். கனகலிங்கம் யாழ்ப்பாணம் | 2 |
| எஸ். சபாரத்தினம் யாழ்ப்பாணம் | 2 |
| எஸ். செல்லத்துரை யாழ்ப்பாணம் | 2 |

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம் உங்கள் இராசி பலன் எப்படி ?

"அத்திரி" எழுதுகிருர்

**[3-1-1965 தொடக்கம் 9-1-1965 வரை]**

### மேடம்

(அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரமத்தியில் நல்லசெய்தியொன்று காத்திருக்கிறது. இதனுல் வருகிற மாதத்தில் உங்கள் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை எதிர்பார்க்கலாம். வாழ்க்கையில் மனத்தைரியத்துடன் காரியங்களில் இறங்கலாமென்ற உணர்வு உங்களுக்கு உண்டாகும், உங்களுடைய சொந்த வாழ்க்கையில் பலவிதமான குழப்பங்கள் ஏற்பட்டாலும் பழைய நண்பர்களின் உதவி உங்களுக்குண்டு.

### இடபம்

(கார்த்திகை 3, 4-ம்பாதத்திலும், ரோகிணி மிருகசீரிடம் 1, 2-ம் பாதத்திலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுடைய சொந்தத் தொல்லைகளை மறந்து உற்சாகத்துடனிருங்கள். நீங்கள் மனச்சோர்வடைந்து மற்றவர்களையும் துன்புறச்செய்யாமல் உற்சாகமாக நடந்து கொள்ளுவதினுல் பலவிதமான காரியங்களையும் சாதிட்பீர்கள். நீங்கள் எதிர்பார்த்த செலவினங்கள் தவிர்க்கப்படும். இதனுல் நீங்கள் அதைரியப்படத்தேவையில்லை.

### மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4-ம் பாதத்திலும், திருவாதிரை, புனர்பூசம் 1, 2-ம் பாதத்திலும் ஜனனமானவர்களுக்கு) வார இறுதியில் நீங்கள் எதிர்பாராத வகையில் சில நன்மைகள் வந்துசேரும். நீங்கள் சற்றும் எதிர்பாராதவழியில் பணவருவாய் ஏற்படும், உங்களுடைய மதிப்பும் செல்வாக்கும் உயரும், குடும்பச் சூழ்நிலையில் சில தொல்லைகளிருந்து கொண்டேயிருக்கும். சிற்சில சமயங்களில் குடும்பத்தினரின் ஒத்துழைப்பில்லாமல் அவதிபடுவீர்கள். அதை மறந்து உங்கள் சொந்த வழியில் முன்னேறுங்கள்.

### கடகம்

(புனர்பூசம் 4-ம் பாதத்திலும், பூசம் ஆயிலியத்திலும் ஜனனமானவர்களுக்கு) உங்கள் நண்பர்களுடன் இந்த வாரத்தைக் கழியுங்கள். அவர்கள் உங்களை உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனுமிருக்க உதவிசெய்வார்கள். உங்களுடைய முயற்சியில் முன்னேறுவதற்கு தக்க புத்திமதிகளையும் அவர்கள் உங்களுக்குச் சொல்லுவார்கள். உங்கள் தேகசுகத்தில் இந்த வாரம் அதிக அக்கறை காட்டத் தேவையில்லை. ஆனுல் குடும்பத்தினர் சுகம் பாதிக்கப்படும்.

### சிங்கம்

(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) உங்களுடைய குடும்பப் பிரச்னைகளும் பணப் பிரச்னைகளும் இந்த வாரத்தில் தீர்த்துவைப்பதற்குள்ள அறிகுறிகள்தென்படும். வருகிற வெள்ளிக்கிழமைக்கு முன் நீங்கள் விரும்பிய காரியங்களைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும். சுணங்கினீர்களானுல் எல்லாம் தாமதத்திலிருந்து இழுபடும் உங்களை விட்டுப் பிரிந்த பழைய நண்பர் ஒருவருடைய உறவு திரும்பியும் இந்த வாரத்தில் வந்து சேரும். அதனுல் மிகவும் மகிழ்ச்சியடைவீர்கள்.

### கன்னி

(உத்திரம் 2, 3, 4-ம் பாதங்களிலும், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரத்தில் இடம்பெறும் சம்பவங்கள் உங்களை உற்சாகப்படுத்தும். மிகவும் மனச்சந்தோஷமான முறையில் உங்கள் உறவினரும் குடும்பத்தினரும் நடந்து கொள்ளுவார்கள், விவாகமாகாத இந்த இராசிக்காரர்களுக்கு விவாகப்பேச்சு மிகவும் துரிதமாகநடைபெறும் விவாகமானவர்களுக்கு குடும்பமகிழ்ச்சியும் சந்தோஷமும் ஏற்படும்.

### துலாம்

(சித்திரை 3, 4-ம் பாதங்களிலும் சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனித்தவர்களுக்கு) இந்தவாரம் உங்களுக்கு மன உற்சாகமும் சந்தோஷமும் அதிகப்படும். தொழில்விருத்தியும் குடும்பச் சூழ்நிலையும் உங்களுக்கு அதிக மகிழ்ச்சியைத்தரும். உங்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வருவாயிருந்து கொண்டே இருக்கும். நீங்கள் மதித்து நடக்கும் பெரியவர் ஒருவருடைய ஆசீர்வாதத்தை அடைவீர்கள். உங்கள் பாரங்கள் ஓரளவு இந்த வாரத்தில் நீங்கும்.

### விருச்சிகம்

(விசாகம் 4-ம் பாதத்திலும், அனுஷம், கேட்டையிலும் ஜனனமானவர்களுக்கு) மிகவும் அமைதியாக இருங்கள். இந்த வாரம் நீங்கள் விரும்பிய மகிழ்ச்சியும் சந்தோஷமும் கிடைக்கும். எந்த விதமான பொறுப்புக்களையும் இந்த வாரத்தில் ஏற்காதீர்கள். ஓய்வு இந்த வாரத்தில் முக்கியமாகத் தேவைப்படும். அனுவசியமாக உண்மை அலட்டிக் கொள்ளாதீர்கள். இதனுல் உங்களுடைய சுகம் பாதிக்கப்படும். நண்பர்களிடம் பொறுப்புக்களைக் கொடுத்துவிட்டு நிம்மதியாக இருங்கள்.

### தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) உங்கள் அன்புக்குரியவர்களுடன் சரளமாகப் பழகுங்கள். உங்களுக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அவர்கள் தருவார்கள், உங்கள் வீட்டைவிட்டு வெளியில் போக மனம் தூண்டும் அல்லது புறத்தியார் உங்களை இழுத்துச்செல்லப் பார்ப்பார்கள். அவற்றிற்கு இடம்கொடாமல் நடந்துகொள்ளவும், வார இறுதியில் இன்பம் விளைவிக்கக் கூடிய உறவுகள் ஏற்படும்.

### மகரம்

(உத்திராடம் 2, 3, 4-ம் பாதத்திலும், திருவோணம், அவிட்டம 1, 2-ம் பாதத்திலும் ஜனனமானவர்களுக்கு) நல்ல செய்திகள் வந்துசேரும். வருகிற பொங்கல் நாட்களை மகிழ்ச்சியுடன் கழிக்கக்கூடியசந்தர்ப்பங்களும் சூழ்நிலையும் உருவாகுவதை இந்த வார இறுதியில் உணர்வீர்கள். குடும்பச் சூழ்நிலைக்குள் மகிழ்ச்சிதரக் கூடிய சில மாற்றங்கள் ஏற்படும். சனிக்கிழமைக்குள் உங்களுடைய சொந்தக் கவலைகள் சிறிது சிறிதாகக் கரைந்து போகும்.

### கும்பம்

(அவிட்டம் 3, 4-ம் பாதங்களிலும் சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்கள் உறவினர்களிடையேயும் நண்பர்களிடையேயும் உங்களுக்கு அமோக வரவேற்பிருக்கும். முக்கியமான காரியங்களைக் கவனிப்பதற்கு சனிக்கிழமைக்குமுன் சந்தர்ப்பங்கள் ஏற்படும். நீங்கள் ஓய்வெடுக்க நினைத்தால் இந்த வாரத்தில் ஏமாற்றமடைவீர்கள். நண்பர்கள் இந்த வாரத்தில் தக்கசமயத்தில் கைவிட்டு விடுவார்கள். சனிக்கிழமை உங்களுக்கு முக்கியமானநாள்.

### மீனம்

(பூரட்டாதி 4-ம் பாதத்திலும் உத்திரட்டாதி, ரேவதியிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுடைய தலைவீக்கமடையக் கூடிய அளவுக்கு மற்றவர்கள் உங்களைப் புகழுவார்கள். இதற்கு இடம் கொடுக்காதீர்கள். சுயநலத்துக்காக உங்களைப் பணயம் வைக்க சிலர் முயற்சிப்பார்கள். எந்த விஷயத்தையும் ஆராய்ந்து செய்வது நல்லது பணவருவாய் சுமாராக இருந்தாலும் அளவுக்கு மிஞ்சிய செலவும் இந்த வாரத்திலிருந்து கொண்டேயிருக்கும்.

# லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர் 1965

இன்று என்ன கிழமை? ஞாயிற்றுக்கிழமையா? லீலா பஞ்சாஞ்சாங்க சித்திரக் கலண்டரில் இன்றைக்குரிய தேதித்தாளைப் புரட்டிப்பாருங்கள் 7-ம் நூற்றுண்டில் பல்லவர்களால் அமைக்கப்பெற்ற மாமல்ல புரச்சிற்பக் கோவிலின் அழகிய படம் முதலில் நம் கண்களைக் கவருகிறது. ஆங்கில, தமிழ், முஸ்லிம், திகதிகளுடன் நாள், நட்சத்திரம், இராகுகாலம், சுபநேரம், பிரதமை, சித்தாமிர்தயோகம், சாக்கிய நாயனுர் குரு பூஜை, பாரதி கவிதையில் ஒரு பொன் மொழி - இத்தனை விஷயங்களையும் 1965-ம் ஆண்டு ஜனவரி மூன்றும் திகதிக்கான ஒரு தாளில் இரத்தினச் சுருக்கமாகத் திரட்டித் தந்திருக்கிறுர்கள். இப்படியே வருஷம் 365 நாட்களுக்குமுரிய 365 தாள்களிலும் உலகப்பெரியார்கள், இலங்கைப்பெரியார்கள், இந்தியப்பெரியார்கள். சமயத்தொண்டர்கள், விஞ்ஞான உலகப்பிரமுகர்கள, கல்விமான்கள், கலைஞர்கள், புலவர்கள், சரித்திரபுருஷர்கள் எனப்பட்டோரின் உருவப்படங்கள் இன, மத, வகுப்பு பேதமின்றி அவரவர் தினங்களில் வெளியிடப்பட்டிருக்கின்றன. பண்டிகைகள் விழாக்கள், கோவில் உற்சவங்கள் என்பனவற்றுக்கு வழக்கம்போல் முதன்மை அளிக்கப்பெற்றிருக்கிறது. இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ ஆலயங்கள், பண்டிகை விபரங்கள் தனத்துக்குத்தினம் சித்திரங்களில் காட்சி தருகின்றன.

காலையில் எழுந்தவுடன் கண் முன்னே புது உலகம் விடிந்திருப்பதைத் தினமும் பார்க்கிறேம். அந்தப் புதுமை உணர்ச்சிக்கு மேலும் புதுமையும் பொருளும் கற்பித்து வாழ்வைத் தாத்பர்யமுள்ளதாகச் செய்கிறது புதுமுறையில் வெளிவந்திருக்கும் லீலா சித்திரக் கலண்டர், அதனுல் கண்விழித்தவுடனே நாம்பார்ப்பதற்கு உகந்ததாக வீடுகளிலே வைத்திருப்பதற்குரியதோர் மங்கலப் பொருளுமாகிறது. இந்தத்தேதித் தொகுப்பு ஒவ்வொன்றும் அழகான வர்ணப்படங்கள் தாங்கிய அட்டைகளில் இணைக்கப்பெற்றிருக்கின்றன. இந்நாள் மலரின் விலை ரூபா 2/20.

### லீலா தினக்குறிப்பு (1965)

கைக்கு அடக்கமான சிறிய அளவில், கவர்ச்சிகரமான உறை அமையப்பெற்றதாக வெளிவந்திருக்கும் லீலா தினக்குறிப்பில் இரண்டு தினங்களுக்கு ஒரு பக்கம் குறிப்பு எழுதுவதற்கு விடப்பட்டிருக்கிறது. அத்துடன் (ஆங்கில திகதி முறைப்படி) இவ்வாண்டு இந்துப்பெருநாட்கள் பற்றிய முழு விபரமும் குருபூஜை தினம், கிறிஸ்தவதிருநாட்கள், இஸ்லாமியப் பெருநாட்கள் உலக நாடுகளின் தேசியதினங்கள், மற்றும் நமக்குத் தெரிந்திருக்கவேண்டிய தபால் தந்தி விபரங்கள் விடுமுறைநாட்கள் மாணவர்க்கு உபயோகமான சரித்திர, பூகோள குறிப்புகள் என்பனவும் டைரியில் 40 [illegible] கொடுக்கப்பட்டி[illegible]றன.

—"தீரா"

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

களிலோ படிப்பதற்கு நிறைய புதினமிருக்கு. எங்கும் ஒரு வாரத்துக்கு முந்தி வீசிய சண்டமாருதத்தைப் பற்றித்தான் ஒரே கூக்குரலாயிருக்கு என்ன அக்கிரமம் பாரும், மின்னுமல் முழங்காமல் இப்படி ஒரேயடியாக ஆயிரக்கணக்கில் உயிர்களும் கோடிக்கணக்கில் பொருள் நஷ்டமும் ஏற்பட்டுவிட்டது இதென்ன புயலா பூகம்பமா என்ன என்று சொல்வது"

"என்ன காணும், பட்டினத்தார் படம் பாரத்துவிட்டு வருகிறீர் அதற்குள்ளே இப்படி கலங்குகிறீரே. நம் செயலால் ஆவதொன்றில்லை தெய்வமே எல்லாம் உன் செயலே-என்று கழுமரம் ஏறத்துணிந்த தீரர் அல்லவா பட்டினத்தார். காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே என்ற உண்மையை உணர்ந்தறிந்த மகாஞானியாச்சே. படம் எப்படி, நான் கூட அவசியம் பார்க்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன். ஒருபத்திரிகையில் பட்டினத்தார் வாசனைத் தைல வியாபாரம் செய்வதாக ஒரு விளம்பரத்தைத் தற்செயலாகப் பார்த்தபோது இவர் எந்தப் பட்டினத்தாரா யிருப்பாரோ என்று சம்சயம் வேறு தொட்டுக்கொண்டது. சென்னை பட்டினத்தாரோ அல்லது பம்பாய் —

"சென்னையுமில்லை செங்கல் பட்டுமில்லை காவிரிப் பூம் பட்டினத்தார் தான். காவிரிப்பூம் பட்டினத்து சிவ நேயச் செட்டியாரும், ஞான கலை அம்மையும் செய்ததவப் பயனுகத் தோன்றிய சற்புத்திரர் திருவெண் காடரேதான். அருமையாக வளர்த்த மகன் கொடுத்த ஒரு காதற்ற ஊசியினுல் வாழ்க்கையின் இரகசியத்தைக் கண்டவர். தைலம், எண்ணை, செண்ட், பவுடர் வாசனைகள் கொட்டகையில் போய் உட்கார்ந்தது முதல் மூக்கைத் துளைக்கத்தான் செய்கின்றன. ஆனுல் அதில் ஒருவாசனையும் திரையிலிருந்து வரவில்லை. பட்டினத்தார் கதையே உருக்கமானகதை. சௌந்தரராஜன் பாட்டு வேறே மனத்தை உருக்கிவிடு[illegible] இத்தாலும்"

"[illegible]

உருக்கமான கதை காணும்.

# கலை அரங்கம்

பெண்டாட்டியின் பிரேதத்தின் மீது உட்கார்ந்து தண்ணீரில் மிதந்து தாசிவீட்டுக்குப் போன பில்வமங்களைப்பார்த்த போது தானே அந்த நாளில் எத்தனையோ பேருக்குப் பைத்தியமே பிடித்தது. பட்டினத்தார் பாடல்களை நிறையப்பாடியிருக்கிறுர்களா படத்திலே?"

"அதைத்தானே சொல்லவந்தேன், பட்டினத்தார் பாடல்களையே பாடியிருந்தால் சௌந்தரராஜனுக்குப் பதில் திருவெண்காடரைத் திரையில்பார்த்திருக்கலாம், என்ன இருந்தாலும் தேசிகர் பாடுவதுபோல் வருமா? இந்தப் படத்துக்கு தேசிகர் நாலு பட்டினத்தார் பாடலை இரவல் குரலாகப் பாடியிருந்தால் கூட அப்பொழுது அதற்கு மதிப்பு வேறே தான், தேசிகரின் தமிழிசை விழாக்கச்சேரி இம்முறை கேட்டீர்களா? அடடா சிலப்பதிகாரத்துக்கானல்வரிப் பாடல்களை என்ன அற்புதமாகப்பாடினுர். மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வதெல்லாம் கேடுண்டெனும்படி கேட்டுவிட்டோம் இனிக்கேள் மனமே—தேசிகர் பாடியல்லவோ கேட்கவேணும் இப்பாடலை; தமிழும் இசையும் கொஞ்சமே..."

"சரிதான் காணும், கொஞ்சம் பொறுமையுடனிரும். கவியோகி சுத்தானந்த பாரதியார் இனிமேல் தமிழ்நாட்டு யோகி, சந்நியாசிகளைப் பற்றி நல்ல மாதிரியாக படமெடுக்க உத்தேசித்திருக்கிருராம். அதுவரை முணுமுணுக்காமலிரும்" என்றேன்.

நண்பர் எழுந்து நடையைக் கட்டினுர், காதற்ற ஊசியும் வாராதுகாணும் என்று அவர் வாய் முணுமுணுத்தது.

— இராமு

## வாழ்க்கைஎனும் போர்க்களம்

— 'யாழ்ப்பாணன்' —

கடலினில் மீனை நாடிச்சென்றதன் கணவன் தன்னை
இடையினிற் குழவி யோடும் ஏந்திழை வருகை நோக்கி
நெடியதன் கண்கள் சோர நெடுந்திரை கிழித்துச்
செல்லும்
படகினைக் காணுளாகிப் பைந்தொடி வாட்டங்கொள்ளும்

வாடையின் வரவு தன்னுல் வாரியும் வலிமைகொண்டு
கோடுயர் குன்றமென்னக் குதித்தெழும் அலைகள் வீசி
நாடியங் கணவற் கேங்கும் நங்கையி னுள்ளத்தோடும்
கூடியே குமுறல் கொள்ளும் கோதையைத் திகைக்க
வைக்கும்,

கணவனும் கடலிற் சென்ருன் காரிகை தன்னே டுற்ற
குணமிகு தம்பி தானும் கூடியே சென்ரு னங்கே
மணவினை முடித்துப் போந்த மூத்ததன் மகனும்
சென்ருன்
இணையிலா திவர்கட் கேங்கும் ஏழையார் அறிவார்
கொல்லோ?

கார்முகில் கவிந்து வானம் கணத்திலோ ரிடியுங் கேட்க
மாரியும் புயலுங்கூடி வருவதோர் தோற்றங் காட்ட
ஊரினின் கரையிலுள்ள தருவதும் ஒடியக் கொம்பர்
பேரிரைவொன்றுகாணும் பேதையாள்நடுக்கங்கொள்ளும்.

தூரத்தோர் படகு தோற்றத் துடித்திடு முள்ளத்தோடும்
சீரிய கணவன் சுற்றம் என்றவள் திகைத்து நோக்கிப
பேரருட் கடவுள் நாமம் பேதையாள பெரிதுஞ் செப்பும்
கார்முகிலிடையே வெய்யோன் கணத்திலோ ரொளியுங்
காட்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்திருத்தக் களஞ்சியமாக இலங்கும் சாத்தனார் இலக்கியம் - மணிமேகலை

— ஜீவா நாவுக்கரசன் —

மனிதனின் மனத்தை மாசற்ற வழிகளில் மாண்படையச் செய்து அறவழிகாட்டி, அமர வாழ்விற்கு அழைத்துச் செல்ல, செந்தமிழ் நாட்டில் சாகாத இலக்கியங்கள் பல தோன்றின. 'குமரி நாடு' அழிந்தும் தமிழ் குமரியாக—கன்னியாக வாழ்வதற்கும்—"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற ஈராயிரம் ஆண்டுப் பழைய பண்பாடு இன்றுவரை நிலைத்து வாழ்வதற்கும் பாவலன் யாத்த பல நூற்கவிதைகளே காரணம் எனலாம். இலக்கியம் இலகுவில் மக்கள் மனதைக் கவர்ந்து நல்வழிப் படுத்துவதால் எந்த இலக்கியங்களும் ஏதோ ஒரு குறிக்கோள் கொண்டே எழுகின்றன. மக்களின் வாழ்வு இலக்கியத்தின் பொருள். எத்துணையளவு மக்களைத் தன் குறிக்கோளால் ஓர் இலக்கியம் ஈர்க்கின்றதோ—கவர்கின்றதோ அதுவே ஓர் இலக்கியத்தின் வாழ்நாள்!

சீரேறு பெற்ற செந்தமிழ்ப் பாவலன்—நாவீறு பெற்ற நல்லிசைப் புலவன் சாத்தனார் யாத்த நூலே:-

"மாவண் தமிழ் திறம் மணிமேகலை துறவு
ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனனென்"

என்பது, சிலப்பதிகார ஆசிரியர் மூன்று [illegible] விளக்க நூல் நாட்டுவேன் என்றார். அது மட்டுமல்ல கண்ணகி கதை முடிவேந்தர் மூவர்க்கும் உரியது. ஆதலின் அவ்வமைப்பில் நூல் எழுத வேண்டும் என்ற குறிப்பை இளங்கோவுக்கு அருளியவர் சாத்தனாரே.

"நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுளென
முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
அடிகள் நீரே அருளுக"

என்று வேண்டிய சாத்தனார் புலமையை நன்கறியக் காண்கின்றோம். சாத்தனாரும் இளங்கோவும் நண்பர்கள். தமிழுக்கு ஆக்கந் தந்தவர்கள், தமிழ் கூறும் நல்லுலகம் மறக்கமுடியாதவர்கள், மதிப்புக்குரியவர்கள்! கண்ணகி வரலாற்றைச் சாத்தனார் இளங்கோவுக்கு விரித்துரைத்தார். அதனால் "தண்டமிழாசான்" என்றும் புலவர் பெருமான் புகழ்ந்தேற்றியதோடு சுவைமிக்க மணிமேகலையின் வரலாற்றைக் காவியமாகப் பாடும்படியும் வேண்டினார்.

"இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப,
வளங்கெழு கூல வணிகன் சாத்தன்
மாவண்டமிழ்த்திறம் மணிமேகலை துறவு
ஆறைம் பாட்டினுள் அறியவைத்தனனென்."

இவ் வடிகளிலிருந்து இளங்கோவடிகளுக்கும் சாத்தனாருக்கும் இடையே இருந்த நட்பின் ஆழத்தை நாம் அளந்தறிய முடிகிறது. இவர்கள் இருவரும் இருவேறு கோணங்களில் வாழ்ந்தவர்கள். இளங்கோ அரசு துறந்து துறவு பூண்டவர். சாத்தனார் இன்பம் நாடி இல்லறம் ஒழுகியவர், இளங்கோ வேந்தன். சாத்தன் வணிகன். இருப்பினும் இருவரும் நட்பினால் ஒன்றுபட்டவர்கள். அன்பினால் கட்டுண்டவர்கள். கருத்துக்கும் கொள்கைக்கும் மதிப்பளித்த காலம் அவர்கள் வாழ்ந்த காலம் என்பதை நாம் மறப்பதற்கில்லை.

ஆனால் பழந்தமிழ் இலக்கியங்களின் அடிப்படையிலே மணிமேகலை எழுந்த போதிலும், சாத்தனார் தமக்கென்று புதிய வழியொன்றைக் கையாண்ட போதிலும், சிறந்த அடிப்படைக் கொள்கைகளை அத்திவாரமாக வைத்து மணிமேகலைக் கோவில் கட்டியெழுப்பிய போதிலும் இளங்கோவின் சிலம்புபோல, கம்பனின் காவியம் போல மணிமேகலை தமிழ் மக்களிடையே அவ்வளவாகப் பரவி அவர்கள் உள்ளங்களை மகிழ்வித்து இலக்கியங்களில் ஓர் நிலையான இடத்தைப் பெற்றுவிடவில்லை. எப்படியோ மணிமேகலை புத்தமதச் சார்புடைய ஓர் இலக்கியம் என்ற தவறான கருத்து தமிழர் இதயங்களில் தோன்றியமை தான் காரணம் எனலாம். எனினும் வடநாட்டில் தோன்றிய இம்மதத்தின் சொற்கள் வடமொழிச் சொற்களாக இருப்பதால் அவற்றைத் தனித் தமிழாக்கம் செய்யும் பெருங் கடமையைச் சாத்தனார் மேற்கொண்டிருந்தார்.

"சமய சம்பந்தமாகச் சில சொற்களையும்-தொடர்களையும், வேறு சிலவற்றையும் இடத்திற்கேற்ப இவர் மொழிபெயர்த்து அமைத்திருத்தல் மிகவும் பாராட்டற்குரியதாகும்" என்பது தமிழ்ப் பெரியார் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் புகழுரையாகும். பிறமொழித் திறம்பெற்ற சாத்தனார் புதிய பல சொற்களைப் 'புத்தாக்கம்' செய்து தமிழ் மொழிக்குத் தனிப் பொருளும் வளமும், புகழும் ஊட்டி 'சாத்தனார் தமிழ்' என்ற தனிப்பெருஞ் சிறப்பையும், தனித்திறனையும் உண்டாக்கிய பெருமை சாத்தனார் ஒருவருக்கே உரியது எனலாம்.

இன்னல் மிகுந்த இவ்வுலக வாழ்விலிருந்தும், பற்றிலிருந்தும் விடுபட்டு வீடு எய்தும் நோக்கத்தோடே இக்காவியம் எழுந்தது. அதிக கஷ்டத்திற்குள்ளாகி பற்றுகளில் பற்றிப் பாவங்களைப் 'பெருக்கிக் கொள்வதால் அவற்றிலிருந்து விடுபடவேண்டிய வழிகளைப் புத்தர் போதித்தார். அன்று வாழ்ந்த மக்களும் பாவத்தில் மூழ்கி பண்பாடின்றி பற்று அறாமல் சுயநலக்காரராகவும், சூது, பொறாமை உடையவராகவும் வாழ்ந்தார்கள். அவர்கள் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டவே சாத்தனார் நூல் அமைத்தார் எனலாம். சிலப்பதிகாரத்தில் பொற்கொல்லன் போன்றவள் மணிமேகலையில் சித்திராபதி. இவள் ஒருத்தியே அன்றைய மாந்தரை அறிவதற்குப்போதுமானவள். இவளுக்கு மாதவியின் தூயவாழ்வோ மணிமேகலையின் துறவோ அடியோடு பிடிக்கவில்லை. இவள் மனம் காமத்தில், கொலையில், களவு, கள்ளருந்துவதில் முற்றிப் பழுத்தது. வாழ்வு தூய்மையாக அமைய எவைகளை அகற்றவேண்டுமெனப் போதி மரத்துப் புத்தன் போதித்தாரோ அவற்றையே அவர்கள் விரும்பி மேற்கொண்டு வாழ்வதைக்கண்ட சாத்தனார் இயற்கையில் கட்டுண்டு இன்பத்தால் பூரிக்கவேண்டிய ஒரு கன்னியைத் துறவுபூண்டு தூய்மையாக வாழவைத்து வழிகாட்ட எண்ணினார். முடியாதென்பதைச் செய்துகாட்ட வேண்டுமென்ற ஆவல் சாத்தனாருக்கு. மக்கள் வாழ்வைச் சீர்திருத்த வேண்டுமென்றே சிலம்பும், மணிமேகலையும் எழுந்தன. சிலம்பின் ஓசை சிங்கநாதம்போல் எத்திசையும் எதிரொலித்தது. ஆனால் மணிமேகலையின் மாண்பு மனிதவர்க்கத்தின் மனத்தைத் தொடவில்லையென்றால் அது சாத்தனாரோ—சஞ்சலம் போக்க வழிகாட்டிய சமயமோ பொறுப்பல்ல. சாத்தனார் தமிழின் தனித்திறன் தெரிந்து அவரின் உள்ளத்தின் தூய்மையையும் சீர்திருத்தக் கருத்தையும் அறியாது மணிமேகலையை பௌத்த மத நூல் என்று ஒதுக்கித் தள்ளிய எமது மடமையே அதற்குக் காரணம். ஆகவே மக்கட் சமுதாயத்தை அல்வழி நீக்கி நல்வழிப்படுத்த எழுந்த ஒரு சீர்திருத்தக் காவியம் மணிமேகலை. இந்தக் காவியக் கலைக்கோவிலுக்குள் நாம் பயபக்தியோடு காலடி எடுத்து வைப்போமானால் காலத்தையும் வென்று ஞாலத்தில் நிலைக்கவல்ல உண்மைகளை அறங்களை—நீதிகளை நாம் காண முடியும்.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவர்களை வானுறையும் தெய்வத்துள் தெய்வமாய் வாழ வளமான வழிகளை வாரி வழங்கியவர் வள்ளுவப் பெருந்தகை. அறம் என்பது வாழ்வின் உயிர்நாடி. அறவழி வாழ்பவனே அந்தணர் என்பதும் செந்தண்மை பூண்டொழுகும் சீலர் என்பதும் அவர் கருத்து.

"மனத்துக் கண் மாசிலனாதல்
அனைத்தறன்
ஆகுல நீர பிற"

என்பதும்

"தன் நெஞ்சு அறிவது
பொய்யற்க,
பொய்த்தபின் தன் நெஞ்சே
தன்னைச் சுடும்"

என்பதும் வள்ளுவர் அறத்தைப் புகுத்த நிலை நிறுத்திய உபதேசங்கள். மனிதன் தானே உணர்ந்து தன் குறைகளைத் தன் மனமே இடித்துரைக்கும்போது இலகுவில் திருந்தி அறவழிவாழ முடியும் என்பது வள்ளுவர் எண்ணம். இதையே சாத்தனார் அடிப்படையாகக்கொண்டு விளக்க நினைத்தார். அதனால் அவர் மனம் என்றோ, உயிர் என்றோ கண்ணால் கண்டு உணரமுடியாத பொருளை விளக்கிப் [illegible]பற்ற, கல்வியற்ற அன்றைய மனிதரைத் திருத்துவது கடினம் எனக் கண்டார். அதனால் இனிக்கும் இளமையும் உணர்ச்சிகளைக் கிளறும் வௌவனமும் இன்பத்தை நாடி உலைகின்ற இந்த யாக்கையும் சுகங்களைத் தேடித் தருகின்ற வான்பெருஞ் செல்வமும் நிலையானதல்ல என்று அவற்றையே பெரிதாக எண்ணிய மாந்தருக்கு அறம் ஒன்றே அழியாத துணை அவ்வழிக்கே' என்று அறிவுரை நல்கினார்.

இளமையும் நில்லா
யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ்
செல்வமும் நில்லா
புத்தேள் உலகம்
புதல்வரும் தாரார்
மிக்க அறமே
விழுத்துணை ஆவது

என்று அறத்தின் அவசியத்தைச் சொல்லிவிட்டு அறம் எனப்படுவது யாதெனக் கேட்கும் அறிவிலார்க்கெல்லாம் விளக்கம் தருவதுபோல மேலே தொடர்ந்து கூறுகிறார்.

"அறமெனப்படுவது
யாதெனக் கேட்பின்,
மறவாது இதுகேள்
மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும்
உறையுளும் அல்லது
கண்டதில்"

(5ம் பக்கம் பார்க்க)

# நாட்டுக் கூத்து

அ. முருகவேள்,
வட்டுக்கோட்டை

'மட்டூரும் பூம்பொழில் சேர் வட்டூர்' என்று புலவர் பாடும் சிறப்பமைந்தது வட்டுக்கோட்டை. இங்கு பதியெழுவறியாப் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் சைவத்தையும் தமிழையுந் தங் கண்ணென ஓம்பி வருகின்றனர். வட்டுக்கோட்டையூர் சித்த மருத்துவக் கலையிற்றுறை போய பெருமக்களைத் தன் அகத்துக்கொண்டு ஈழத்து ஊர்கள் யாவற்றிலும் ஏற்றம் பெற்று இலங்குகின்றது.

இவ்வூர் நாட்டுக் கூத்துக்கும் பேர்பெற்ற கிராமம். ஊர்மக்கள் கூத்தினைப் பேணிக் காத்தலிலும் ஆடுதலிலும் வல்லுநர்.

உடல் உழைப்பால் அலுத்த மக்கள் உவகை எய்துதற் பொருட்டு நாடகங்களை ஆடிக் களிக்கின்றனர். நாடகம் இசைத்தமிழையும் இயற்றமிழையுந் தன்னுள் அடக்கி முத்தமிழ் பொதிந்த முழுக்கலையாகத் திகழ்கின்றது.

வரலாற்று ஏட்டைப் புரட்டினுற் சோழமன்னர் காலத்தில் இராசராச சோழன் நாடகம், புலியூர் நாடகம் முதலிய நாடகங்கள் இருந்ததற்குரிய அறிகுறிகள் காணக்கிடக்கின்றன. அவை இப்பொழுது கிடைப்பதாகத் தெரியவில்லை. தமிழில் எழுந்த தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் உழத்திப் பாட்டு, குறத்திப் பாட்டு என்பனவும் ஒருசிலவாம். உழத்திப் பாட்டும் குறத்திப் பாட்டும் பிற்காலத்தில் பள்ளு நாடகம், குறவஞ்சி நாடகம், நொண்டி நாடகம் என விரிவடையலாயின. இவற்றைத் தழுவி நாட்டுக்கூத்துக்கள் தோன்றலாயின.

நாட்டுக் கூத்துக்களைச் சிலர் கருநாடகம் எனவும் வழங்குவர். பெரும்பாலும் நாகரிகம் விரிவெய்திய கரைப்பகுதிகளில் வதிந்த மக்கள் இதனை விரும்பி ஆடிவந்தமையின் இதைக் கரைநாடகம் என்றே வழங்குதல் சிறப்புடைத்தாம். வட்டுக்கோட்டை மக்கள் பல்லாண்டாகத் தலைமுறை தலைமுறையாகத் தருமபுத்திர நாடகம், விராட நாடகம், குருக்கேத்திர நாடகம், அழகேந்திர நாடகம், இந்திரகுமாரன் நாடகம் போன்ற நாடகங்களை ஆடி மகிழ்ந்தமையோடமையாது பிறரையும் மகிழ்வித்து வந்தனர். சுருங்கக்கூறின் நாட்டுக்கூத்துக்கு உயிரூட்டமளித்தனர் என்று துணிந்து கூறலாம்.

நாடகங்கள் ஆடப்படும் பொழுது நாமெல்லாம் கதை நடந்த காலத்துக்கும் கதை நடந்த இடத்துக்கும் சென்றுவிடுகின்றோம். ஆடுநர் நிகழ்ச்சிக்கேற்ப ஆடுதலாலே இந்நிலை ஏற்படுகின்றது. இந்நாடகங்களை ஆடிய பெருமக்கள் இன்றும் முதியோராய் எம்மிடை வாழுகின்றனர்.

நாடகப் பாடல்களை அவர்களின் வாய்வழியாகக் கேட்கும் பொழுது உவகை விஞ்சும். அழுதபிள்ளையும் அமைதியுறும். பாடுநரின் சுவை அமுதமாகி விடுகின்றது. பாட்டுக்கள் துள்ளுநடையிற் செல்வதுடன் இலக்கிய நயஞ்சொட்டுவனவாகவும் இருக்கின்றன. பின்வரும் பாடல்களைப் பாடிப் பாருங்கள், உவகை பிறக்கும்.

(1) தருமபுத்திர நாடகத்தில் வீமன் திரௌபதிக்குக் கூறுதல்)

"உய்ந்நன்றி யறிந்த தேவர்
உலகினில் உண்டு உந்தன்
கைந்நன்றி சொடுநீர்தந்த
காண்மலர் அழகையுண்டு
மெய்ந்நன்றி யசிந்த பெண்ணே
வியன்மலர் தராதுவிட்டாற்
செய்ந்நன்றி கொன்றார் சேரும்
நரகிடைச் சேருவேனே.

(2) விராட நாடகத்தில் வண்ணமகளைப் பார்த்துக் கீசகன் கூறுதல்:

"கந்தனை ஆனைக்கோட்டை
கட்டுடையதனை யுந்தன்
உந்திசேர் சுழிபுரத்தை
உவந்துயான் பார்க்கப்
பார்க்க
வந்து சில்லாலையான் கைதடி
[illegible]
சிந்துமுன் [illegible]
சீக்கிரம் அழைத்திடாயே."

(இப்பாடல், ஈழத்துள்ள ஊர்களின் பெயர்களால் ஆக்கப்பட்டிருக்கின்றன. பாடற்பொருளை அறியும் பொழுது சுவை பிறக்கும். இதனைப் போன்ற பாடல்களே முத்துக்குமார கவிராசர் பாடிய,

"முடிவிலாதுறை சுன்னாகத்
தான் வழி..."
"மல்லா கமாதகலான் மருகன்
சுன்னாகத்தான்..."

என்ற பாடல்களென்பதுங் குறிப்பிடத் தக்கதாம்.)

(3) குருக்கேத்திர நாடகத்தில் கிருட்டிணர் ஆடற்றரு.

"சங்கினெடு கொம்பு வரத்
தரள சத் (தீ)ரக் குடைகள்
வர
எங்கும் மன்னர்கூட வர
ராச ராசன் தோற்றினனே

(4) இந்திர குமாரன் நாடகத்தில் வசுதேவன் சுபத்திரையைப் பார்த்துக் கூறுதல்;

அஞ்சுகமே தேனே அமிர்தே
அருங்குதலைக்
கிஞ்சுக வாய் மானே
நின்கிள்ளை மொழிகேட்க
நெஞ்சம் மகிழ்வாய்
அழைத்தேன் நித்தமுமென்
முன்னணுகி
வஞ்சியரோடு சித்திர
மாளிகையில் வைகுவீரே"

இந்நாடகங்களை வளரச் செய்யும் நோக்கமாக நாட்டுக் கூத்து அபிவிருத்திக்குழு என்ற சபையினையும் ஏற்படுத்தியுள்ளோம்.

எம்மிடம்:

தருமபுத்திர நாடகம், விராட நாடகம், குருக்கேத்திர நாடகம், இந்திரகுமாரன் நாடகம், சூது, துகிலுரிதல் நாடகம், வாளபிமன் நாடகம், பப்புருவாகன் நாடகம், இராம நாடகம், குசலவ நாடகம், அரிச்சந்திர மயான காண்டம், நளச்சக்கரவர்த்தி நாடகம், கன்னன் நாடகம், அலங்காரரூபன் நாடகம், வெடியரசன் நாடகம், பூதத்தம்பி நாடகம், நொண்டி நாடகம், காமன் கூத்து, காத்தான் கூத்து, [illegible] நாடகம், வள்ளியம்மன் நாடகம் என்னும் நாடகங்கள் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் உள. இவற்றை நம் முன்னோர் பெரிதும் முயன்று பேணிக்காத்துத் தந்தனர். அவர்களுக்கு யாம் செய்யும் கைம்மாறு தான் யாதோ? இங்காளில் இரசிகப் பெருமக்களும் ஆட்சியாளரும் இளைஞர் இயக்கங்களும் நாட்டுக் கூத்தினைக் காத்தோம்புதற்கு முற்பட்டிருப்பது பாராட்டற் குரியதாகும். எம்மிடம் இருக்கும் நாடக ஏட்டுச் சுவடிகளை நூலுருவிற் கொண்டு வர வேண்டுமென்று பெரிதும் விழைகின்றோம். தமிழ் கூறும் நல்லுலகம் ஆதரவு நல்குமேல் அவை வெகுவிரைவில் அச்சேறித் தமிழ் மக்கள் யாவருக்கும் பயன்படுமென்பது எமது அசையாத நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மார்கழி மீ 20வ. (3-1-65)

## தர்ம சிந்தை

"மந்திரி! நமது மாநகர் தன்னில் மாதம் மும்மாரி மழைபொழிகிறதா?" இப்பொழுது இந்தக் கேள்வியை நாட்டுக்கூத்துக்களில் வரும் அரசன் கேட்பதைத்தான் காணலாம். அந்தக் காலத்தில் நாட்டை நீதிநெறி வழுவாமல் அரசோச்சி வந்த ரசர்கள் தாம் நீதிதவறாது ஆட்சிபுரிந்தால் மாதம் மும் மாரி பெய்யும்; மக்கள் குறைவின்றி வாழ்வார்கள் என்று நம்பினர். மழை பொய்த்து விட்டதென்றால் தமது ஆட்சியில் தாம் தவறு செய்துவிட்டதை உணர்ந்து அதற்குப் பிராயச்சித்தம் செய்வர். அக்காலத்தில் ஒருநாடு இயற்கையின் சோதனைக்குட்பட்டு வெள்ளத்தாலோ, புயலாலோ, பஞ்சத்தாலோ, பட்டினியாலோ துன்பம் நேரும்பொழுது அரசன் தனது மந்திரியை அழைத்து, "நம் நாட்டில் ஆலய வழிபாடுகளில் ஏதாவது குறையேற்பட்டு விட்டதா? சாதுக்கள், அடியார்களுக்கு ஏதும் தொல்லை விளைந்ததா? குடிமக்களைக் கொடுமைப் படுத்தினேமா? ஏன் இந்த தெய்வ சாபம் நேர்ந்தது?" என்று கேட்பான். தவறு நேர்ந்திருந்தால் அதை ஆராய்ந்து ஆவன செய்வார்கள்.

இன்று மன்னர் ஆட்சி இல்லை. மக்கள் ஆட்சி தான் நடைபெறுகிறது. எனவே இன்று நாட்டில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சூறாவளி கோரத்தாண்டவ மாடியதற்குக் காரணம் என்ன? யாருக்கு என்ன தீங்கு செய்தோம்? ஏன் இந்தத் தண்டனை என்று மக்கள் தம்மையே கேட்டுக் கொள்ளவேண்டும். வாழ்க்கை வசதியாக இருந்தால் ஆண்டவனை பலர் மறந்துவிடுவதுண்டு. தர்மம், நியாயம் அவர்கள் சிந்தையில் இடம்பெற மாட்டா. ஆணவம் மிகுந்துவிடும். இந் நிலையில் தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்கி மக்கள் மாக்களாகி விடுவர். ஆபத்து நேரத்தில்தான் மக்கள் ஆண்டவனை நினைப்பர்; தர்ம சிந்தை தோன்றும்; பாவச் செயல்கள் நீங்கும். சூறாவளி வீசி வீட்டின் முகட்டு ஓடுகள், கூரைகள் பறக்கத் தொடங்கியதும், மரங்கள் சடசடவென முறிந்துவிழத்தொடங்கியதும் இறைவன் நாமத்தை மறந்திருந்தவர்கள் அவன் நாமத்தை சிந்தையிலிருத்தி வாயார ஓதித் துதித்தனர். இராமேஸ்வர ஆலயத்தில் தஞ்சம் புகுந்த ஆயிரக்கணக்கான மக்கள் கடல்கொந்தளிப்பையும் காற்றின் கோரத்தாண்டவத்தையும் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த பொழுதும் மெய்மறந்து "ராமா ராமா" என்று ராம நாமத்தை ஜெபித்துக் கொண்டிருந்தனராம். தவறுசெய்தவர்கள் தான் தண்டிக்கப்பட்டார்கள் என்றோ தண்டிக்கப்படாதவர்கள் எல்லோரும் தவறுசெய்யாதவர்களென்றோ கொள்ள முடியாது. துன்பத்துக்குள்ளானவர்களைப் பார்த்தும் துன்பமுறும் மக்களுக்கு உதவிசெய்து அவர்கள் துன்பத்தைத் துடைப்பதன் மூலம் இந்த ஆபத்துக்களுக்கெல்லாம் தப்பியுள்ளவர்கள் தமக்கு தண்டனை கிடைக்காமல் தப்பித்துக் கொள்ள இது ஒரு வாய்ப்பு. வீடிழந்தும், தொழிலிழந்தும், பொருள்பண்டமிழந்தும் துன்பமுறும் மக்களுக்கு உதவிசெய்து அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்க வேண்டியது இன்று சூறாவளிக்குத் தப்பியுள்ள மக்களது கடமை. தர்ம சிந்தனையை மறந்திருந்தவர்களுக்கு அந்தச் சிந்தனையை இந்தச் சூறாவளி ஏற்படுத்தவேண்டும்.

தர்மம் தலைகாக்கும் என்பார்கள். ஆனால் நம்மில் எத்தனை பேர் தர்மத்தைப் பற்றிச் சிந்திக்கிறோம். நூற்றுக்கணக்கான மக்கள் ஆழ்கடலுக்குப் பலியாகிவிட்டனர். இந்த மக்களையே நம்பிவாழ்ந்தவர்கள் எத்தனை பேர். இன்று அவர்கள் நிலை என்ன? நாளை அவர்கள் வாழ்வென்ன? காடுகளைக் களனிகளாக்கி வீட்டுக்கும் நாட்டுக்கும் உணவளிப்பதற்காக விஷப்பாம்புகளுக்கும் கொடிய மிருகங்களுக்கும் அஞ்சாமல் குடியேறி சூறாவளியால் பயிர்களையும் குடியிருந்த குடிசைகளையும் இழந்து நிற்கும் மக்களின் கதி என்ன? வாழை மரங்களையும் பயிர்களையும் நம்பி வாழ்ந்தவர்களும் இவற்றினால் தைபிறந்ததும், தங்கள் பெண், பிள்ளைகளுக்கு தை மாதத்தில் ஒரு வழிபிறக்குமென எண்ணியிருந்த பெற்றோரும் அவர்களுக்குப் பாரமாக இருக்கிறோமே என நெடுமூச்செறிந்து நிற்கும் இளம் பெண்களின் எதிர்காலமும் என்ன?

ஆபத்துகளுக்கெல்லாம் தப்பி வயிறாரச் சாப்பிட்டு, சுகமாகப் படுத்துறங்கும் வாய்ப்புப் பெற்றவர்கள் சிந்திக்கவேண்டும். சிந்தனை தர்மசிந்தனையாக மாறவேண்டும். கிடைத்த வாய்ப்பை நாம் பயன்படுத்த மறந்தால் நாளை நமது பகுதியிலும் சூறாவளி வீசாது என்பது என்ன நிச்சயம்!

வடமொழி நாடகம்

## பவபூதியின் நாடகப் பண்பு

— நவாலியூர் சோ. நடராஜன் —

மிருச்சகடிகத்துக்கு இணையாக ஒரு பிரகரணம் எழுத வேண்டுமென்ற நோக்கத்தோடு பவபூதி மாலதீமாதவம் என்ற பிரகரணத்தை எழுதியிருக்கலாம். ஆனால் சூத்திரகரின் நகைச்சுவை இங்கே குறைவு. ஹாஸ்யம் பவபூதியின் மனப்போக்குக்கு ஏற்றதன்று. அதையுணர்ந்த பவபூதி விதூஷகன் என்ற பாத்திரத்தையே தனது நாடகத்தில் சேர்க்காதுவிட்டார். அதற்கு ஈடாக அவர் பயங்கரமும் அதிசயமும் நிறைந்த காட்சிகளைப் புகுத்தினர். மந்திரவாதி ஒருவன் ஒருபெண்ணைப் பலியிட முற்படல், தன்னுடலிலிருந்து மாமிசத்தை வெட்டிப் பூதங்களைப் பிரீதிப் படுத்தல் போன்ற அச்சச்சுவை தரும் காட்சிகளைப்பயன்படும் முறையில் கதையிற் புகுத்தி ஐந்தாம் அங்கத்தைத் திகிலடையும் காட்சி நிறைந்ததாக்கியுள்ளார். யானைக்குப் பதிலாகப் புலியைச்சேர்த்துள்ளார். காமந்தகீ, அவலோகிதை, சூடாமணி போன்ற போலித் தவமுதாட்டிகளின் நடவடிக்கைகள் புகுத்தப்பட்டுள்ளன. விக்கிரமோர்வசீயத்திலே நாலாம் அங்கத்தில் வரும் சோகக் காட்சிகளைப் போல ஒன்பதாம் அங்கத்திலேயும் காணப்படுகின்றன. பவபூதியின் சோகக்காட்சி காளிதாசனுடையதை ஓரளவு வேறுவிடுகிறது. அதே அங்கத்திலே மேகதூதச் சுலோகங்களை நினைவூட்டும் பாடல்களுமுண்டு. கதைப்பொருள் சுவாரஸ்யமானதாயிருந்தாலும் யதார்த்த உலக வாழ்க்கையோடு பொருத்தமற்றனவாயிருக்கின்றன. கதாநாயகனோ, கதாநாயகியோ தனித்தன்மையுடையவராகக் காணப்படவில்லை.

மகாவீர சரிதத்திலே செய்கைகளுக்குப் பதிலாக நீண்ட சொற்பொழிவுகள் காணப்படுகின்றன. மாலியவான், சூர்ப்பனகை, சம்பாதி, சடாயு, இந்திரன், சித்திராதன், அனகை ஆகிய பாத்திரங்களிடையே நிகழும் உரையாடல்கள் நாடக அமைதியற்றனவாகக்காணப்படுகின்றன.

உத்ரராம சரித்திரத்திலே முதலாவது அங்கம் அழகாக அமைந்திருக்கிறது. முடிந்து போன பெருந்துயரங்களை நினைவூட்டும் சித்திரங்களைப் பார்த்துக்கொண்டிருந்த சீதை அத்துயர்கள் நிகழ்ந்த இடங்களை மறுபடியும் ஒருமுறை பார்க்க வேண்டுமென விரும்பிக் கேட்கும்பொழுது எதிர்வரும் பெரியதுன்பத்தை எதிர்பாராமலே ஸ்ரீராமன் இணங்குகிறான். அடுத்த கணமே சீதையைக் காட்டுக்குத் துரத்திவிடக் கட்டளை கொடுத்து விடுகிறான். மூன்றாவது அங்கத்திலே சீதை இராமனுடைய கொடுமையைக்கூட மன்னித்துவிடுவது, அவளுக்கு அவனிடமுள்ள அடக்க முடியாத அன்பை அழகாக எடுத்துக்காட்டுகிறது. கடைசி அங்கதிலேதான் பவபூதியின் திறமை உச்ச நிலையை அடைகிறது. இங்கே நாடகத்திலே வேறொரு நாடகம் காட்டப்படுகிறது. இராமனுடைய விபூதியும் உதாரகுணமும் இங்கே நன்றாய்ச் சித்தரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே சீதையும் சுக்குமாகாரமாய் தெய்வீக ஒளிபெற்று நடமாடுகிறாள். சனகனும், கோசலையும் உணர்ச்சியுடன் காணப்படுகின்றனர்.

உத்தர ராமசரிதத்திலே கவிதைப்பண்பு நிறைய உண்டு. வாழ்விலும் இயற்கையிலும் காணப்படும் உன்னதமான காட்சிகளையும், இயல்புகளையும் பாடுவதே பவபூதியின் உள்ளப்போக்காகும். ராமசந்திரமூர்த்தியும், லவனும் காட்டும் வீரமும், [illegible] டியின் சோக உணர்ச்சியும், [illegible] கின்றன. காடுகள், மலைகள், நதிகள் என்பனவும் இந்நாடகத்தில் பங்குபற்றுகின்றன. இயற்கையிலுள்ள சௌந்தரியமும், கம்பீரத்தன்மையும் எல்லாம் பவபூதியின் கவனத்தைப் பெறுகின்றன. தன்மகிமையால் உள்ளத்திலே பவபூதி வியந்து பாடுவார். காளிதாசருடைய இயற்கை வருணனை இவ்வகையில் குறுகிய எல்லையையுடையதாகவே தோன்றும். கடைசி அங்கத்திலே சீதையும் ராமனும் சந்திக்கும் கட்டம் மிக உருக்கமானது. சாகுந்தலத்திலே கடைசிக் கட்டத்தில் துஷ்யந்தன் சகுந்தலையைச்சந்திக்கும்காட்சி அத்தனை ஆழ்ந்த ரசபாவமுடையதெனக்கூறமுடியாது. இராமனும் சீதையும் பட்ட அனுபவங்கள் மிக ஆழமானவை. பூரணவாழ்வோடு தொடர்புடைய அனுபவம் அத்துணை விரிவானதன்று.

காளிதாசனுக்கு வாழ்வு இன்பச் சரங்கமாயிருந்தது. எல்லாம் ஒழுங்கு நிறைந்த இன்பக்கேணியாயிருந்தது. ஆனால் பவபூதிக்கு உலக வாழ்வு விளங்க முடியாத பெரிய புதிர் நிறைந்ததாய்க் காட்யளித்தது. "பொருள்களை ஒன்று சேர்ப்பது மர்மமானதொரு அந்தரங்க பந்தம். அன்பென்பது வெளியுபாதைகளிற் தங்கியிருக்கவில்லை. தியாகமே உயர்ந்த குணம், அதுவே உள்ளது. பாசம், கருணை, இணக்கம் என்ற எல்லாவற்றையும் துன்பமின்றியே தியாகஞ்செய்யஸ்ரீராமன் ஆயத்தமாயிருக்கிறான். சீதையைக் கூடத் தன் பிரசைகள் நிமித்தம் தியாகஞ் செய்கிறான். நட்புஎன்பது தூய்மையானது. தன்னலம் துறந்து நண்பன் நலத்தைக்கருதவேண்டும். துவேஷம், வஞ்சனையென்பன குன்றி நண்பரோடு பழக வேண்டும். உண்மையான நண்பன் தன்னலம் போலவே நண்பன் நலத்தையும் கருதுவான். தாம்பத்திய அன்பைப் பற்றியும் அவர் மிக உயர்ந்த இலட்சியமுடையவராய்க் காணப்படுகிறார். சுகம், துக்கம், உயர்வு, தாழ்வு, வறுமை, செல்வம் எல்லா நிலையிலும் மாறாத தன்மையுடையது. வயதினால் முதிராதது. காலஞ் செல்லச்செல்ல முதிர்ந்து கனிவு பெறும் தன்மையுடையது. எல்லாம் வெளிப்படை அன்புடையவரிடத்திலே எந்தவிதமான கரவுமிருக்காது. இத்தகைய அன்பு பூர்வபுண்ணியப் பலனாகப் பாக்கியவான்களுக்கே கிடைக்கக் கூடியது. குழந்தைபிறந்துவிட்டால் முடிச்சுப் பூரணமாகி விடுகிறது.

மாலதீமாதவ நாடகத்தின் முகவுரையிலே "என்னை இகழ்வோர் ஒன்றும் அறியமாட்டார்கள். அவர்களுக்காக நான் இந்த முயற்சியைச் செய்யவில்லை. என்னைப் போன்ற தன்மையுடையவர் சிலர் இருப்பார்கள். காலத்துக்கு முடிவில்லை. உலகம் பெரியது" என்று கூறுகிறார். அவருடைய முயற்சிகளைப் பலர் அக்காலத்தில் பாராட்டவில்லையென்பது தெரிகிறது.

தன்னிடம் பொருள் ஆழமும் உயர் செறிவுள்ள உரையுமே காணலாம் என பவபூதி கூறுகிறார். (ப்ரௌடத்வம் உதாரதா ச வசசாம்) காளிதாசரும் பவபூதியும் பரம்பரையாக வந்த சமூக அமைப்பை ஏற்றுக் கொண்டனர். குப்த அரசாட்சியின் கீழ் காளிதாசர் சகல சிறப்புக்களையும் பெற்று வாழ்ந்தார். பவபூதி அந்த கைய அதிட்டம் பெறவில்லை. அரசனுடைய கடாட்சமும் அவருக்கதிகம் கிடைக்கவில்லை. அதனால் வாழ்க்கையிலுண்டாகும் அல்லல்களையெல்லாம் கோடியாகக் கண்டு முதிர்ந்த அனுபவத்தைப் பெற்றார். இன்பத்தையே நோக்கமாகக் கொண்ட துஷ்யந்தனைப் போன்ற ஒரு அரசனையோ தெய்வலோக ஊர்வசியோடு காதல் லீலை புரியும் புரூரவஸ் போன்ற மன்னனையோ பவபூதி படைக்கவில்லை. மனிதருள் உயர் மனிதனாக வாழ்ந்த இராமனுக்கும், பெண்கள் திலகமாய் வாழ்ந்த சீதைக்கும் உண்டான அவலக் கவலை கையாறுகளைப்பற்றியே பவபூதி நாடகமெழுதினர். அவ்வின்பதுன்பங்கள் மக்களுள்ளத்திலே திடீரென எதிரொலி கிளப்பும் அனுபவங்கள்:-


சிறிது சிறிதாய் மெதுவாக மெதுவாகக் கபோலத்தோடு கபோலம் சேர்ந்தன. மெதுவாக என்னென்னவெல்லாமோ பேசினேம். வெப்பம் நிறைய ஒருவரையொருவர் இறுகப் பற்றிக் கொண்டோம். எம்மையறியாமலே கழிந்து கழிந்துகொண்டிருந்த யாமங்களையுடைய இராத்திரியும் முடிவுற்றது."

மாதவனும் மாலதியும் ஈற்றில் தம்பதிகளாகுஞ் சமயம் காமந்தகி கூறும் அறிவுரைகள் ஆணித்தரமானவை.

"என்னருமைக் குழந்தைகளே! கேளுங்கள் கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் பிரியநண்பர்கள். சுற்றத்தவர் எல்லாருஞ்சேர்ந்த கூட்டுத்தொகை; விருப்பங்களின் சமூகம். நிதிகட்கெல்லாம் பெருநிதி உயிரென்றே கூறிவிடலாம்."

உத்தரராம சரிதத்திலே அழகிய உணர்ச்சிமிக்க பாடல்களுண்டு. முதலங்கத்திலே இளைப்புற்ற சீதை இராமனுடைய கையணைப்பில் நித்திரை செய்கிறாள். வேறெந்தப் பெண்ணையும் பரிசித்தறியாத கை சீதையை இவ்வாறு பலமுறை தாலாட்டித் தூங்கச் செய்தகை. தூங்கும் சீதையின் முகத்தை வியப்போடு ராமன் பார்க்கிறான்.

"இவள் என் வீட்டு லட்சுமி; கண்களுக்கு அமிருதச்சலகை போன்றவள். சந்தன ரசம் போன்றது என்னுடைய மேனியிலே இவள் பரிசம். என் கழுத்தை வளைத்து அணைக்கும் இவளுடையகரங்கள் தண்மையும் மென்மையும் நிறைந்த முத்துமாலை போலிருக்கின்றன. அவளுடைய பிரிவைத் தவிர வேறென்ன அவளிடத்து அருமையில்லாதவை."



கொழும்பு விவேகானந்த சபையினரால் அண்மையில் நடாத்தப்பட்ட அகில இலங்கை தமிழ் பேச்சுப்போட்டியில், மத்திய பிரிவில் முதலிடம் பெற்றுத் தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்த செல்வி ச. ஜயகுமாரி. இவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரி மாணவியும் டாக்டர் வி. கே. சண்முகநாதனின் புதல்வியுமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமேடை

டி.எம்.எம்

# சென்ற ஆண்டில்...

## நேரு நினைவு

சென்ற ஆண்டு சர்வதேச அரங்கில் ஏராளமான சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன இவற்றில் பண்டிட் நேருவின் மரணம் உச்சம் பெற்ற நிகழ்ச்சியாகும். மே 27ம் திகதி அவர் அமரரானர்.

நேருவின் மரணம், இந்த நூற்ருண்டின் மிகப்பெரிய மனிதர் ஒருவரைப் பிரித்துவிட்டது. அரை நூற்ருண்டுக் காலம் ஆசியாவின் சிறப்பு மிக்க வழிகாட்டியாகவும், நந்தாவிளக்காகவும் திகழ்ந்த சரித்திர சிருஷ்டி அவர். ஒரு பெரிய குருசீடப்பரம்பரை நேரு மறைவுடன் முற்றுப் பெற்றுவிட்டது. குரு, சீடர்களான ராமகிருஷ்ணரும்—விவேகானந்தரும் எப்படி இந்திய ஆத்ம ஞானத்தின் உள்ளொளியாகத் திகழ்ந்தார்களோ, அதேபோல் குருவும் சீடருமான காந்தியும், ஜவஹரும் அதன் வெளிப்புறத்தோற்றங்களாகத் திகழ்ந்தனர். நேருவைப்போன்ற ஒருபெரிய மனிதருக்கு எவ்வளவு சின்னச் சின்ன ஆசைகளெல்லாம் இருந்தன என்பது வியப்புக்குரிய விஷயம். குழந்தைகள், மிருகங்கள், பறவைகள், மலைகள் ஆறுகள், மரங்கள், மலர்கள் எல்லாம் அவரது ஆசைப் பெட்டகத்தில் அடங்கியிருந்தன. குறிப்பாக அந்தச் சிவப்பு ரோஜா, என்றும் வாடாமலரைப்போல் அவரது நினைவைநெஞ்சிலிருத்தும்.

★

## குருஷ்சேவ்

ஸ்டாலினுக்குப் பின் எட்டாண்டுக்காலம் கிரம்ளினில் செங்கொடியை உயர்த்திப் பிடித்தவர் குருஷ்சேவ். அவரது பதவியிழப்பு உலக அரசியலில் முக்கிய நிகழ்ச்சி. சர்ச்சிலினுல் வருணிக்கப்பட்ட "இரும்புத்திரை"களுக்குப் பல ஜன்னல்கள்வைத்து உள்ளேயும், வெளியேயும் காற்றுப்புகச் செய்தவர் குருஷ்சேவ்தான். ரஷ்யாவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையில் புதிய திருப்பத்தைக் கொடுத்த குருஷ்சேவ், பதவிநீங்கியது பலருக்கு வருத்தத்தை அளித்தது என்பதில் சந்தேகமில்லை. மறக்கமுடியாத ஒரு மனிதர் அவர்.

★

## தொழிற்கட்சி

13 ஆண்டு ஆட்சிநடத்திய கன்சர்வேட்டிவ் கட்சி தேர்தலில் தோற்று தொழிற்கட்சி பதவிக்கு வந்தது மற்றோர் முக்கிய நிகழ்ச்சி. டௌனிங் தெரு 10-ம் இலக்கத்தில் திரு. வில்சன் குடியேறிய சொற்ப நாட்களில் உள்நாட்டு பொருளாதாரக் கொள்கையிலும், வெளிநாட்டுக் கொள்கையிலும் உயிர்த்துடிப்பு ஏற்பட்டது.

பிரிட்டிஷ் தேர்தலும், குருஷ்சேவ் பதவி இழப்பும், சீன அணுக்குண்டு வெடிப்பும் கிட்டத்தட்ட ஏககாலத்தில் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

பிரிட்டனில் நீண்டகாலம் கன்சர்வேட்டிவ்கள் ஆட்சி நடத்தி விட்டதால் பொது மக்களுக்கு சலிப்பு ஏற்பட்டதைப் போலவே காமன்வெல்த் நாடுகளிலும் பொதுவாக சலிப்பு ஏற்பட்டிருந்தது. ஒரு மாறுதலை—ஒரு புதுமையை அனைவரும் எதிர்பார்த்தார்கள். அது நிகழ்ந்துவிட்டது.

★

## ஜோன்ஸன்

சீன அணுக்குண்டைத் தொடர்ந்தும், கிரம்ளினில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்தும் அமெரிக்கத் தேர்தலில் புதிய விளைவு ஏற்படக்கூடும் எனப்பலர் எதிர்பார்த்தனர். ஆனால் சரித்திரத்திலில்லாத ஒன்றரைக்கோடி பெரும்பான்மையுடன் விண்டன் ஜோன்ஸன் பதவிக்கு வந்தார். பார்லிமெண்ட் தேர்தல்களிலும் அவரது கட்சி பெரும்பான்மை வெற்றிபெற்றது. இந்தவெற்றி அமெரிக்காவுக்கும், உலகுக்கும் அரசியல் ஸ்திரத்தை அளித்தது என்பதில் சந்தேகமில்லை.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல், சென்ற ஆண்டு உலகின் கவனத்தைக் கவர்ந்த மிகப்பெரிய நிகழ்ச்சிகளில் ஒன்று. மேற்கு நாடுகளின் தலைமை ஸ்தானம் இன்று இருப்பதைப் போல் என்றும் ஸ்திரம் பெற்றிருந்ததில்லை என்பது முக்கிய விஷயம்.

★

## "சீனுக்குண்டு"

சீன அணுக்குண்டு வெடித்தது மற்றோர் பெரிய நிகழ்ச்சி. "மஞ்சள் நிற சீன, மூங்கில் திரை சீன, சப்பை மூக்கு சீன" என்று பலர் கேலிசெய்த போதிலும், அது அணுக்குண்டை வெடித்துவிட்டது. "பிள்ளைகளுக்கு பட்டாஸ பெரியவர்களுக்கு அணுக்குண்டு" என சீன இப்போது பெருமையுடன் அணு வல்லரசாகிவிட்டது. எனவே கேலி செய்தவர்கள் சற்றுயோசிக்க ஆரம்பித்தனர். 1959-ம் ஆண்டு முதல் ரஷ்ய உதவி நிறுத்தப்பட்டதால் மூன்றுண்டுகள் சீன பெரும் பொருளாதார சீரழிவை எதிர்நோக்கவேண்டியிருந்தது. இருந்தும் பிடிவாதமாக தனது பெரிய பட்டாசை அது வெடித்துககாட்டியது, உலகின் கவனத்தை வெகுவாகக்கவர்ந்தது.

★

## போப்பாண்டவர்

சென்ற ஆண்டு ஆரம்பத்திலும், இறுதியிலும் போப்பாண்டவர் இரு வெளிநாட்டு யாத்திரைகளை மேற்கொண்டார். சென்ற ஜனவரியில் அவர் பாலஸ்தீனம் சென்று ஜெருஸலம், நாஸரத், பெத்லஹேம் ஆகிய இடங்களைப் பார்வையிட்டார். கத்தோலிக்க புனித யாத்திரையை வருட ஆரம்பத்தில் முடித்துக் கொண்டபின், வருடக் கடைசியில் இந்தியாவுக்கு வந்தார். இம்முறை சமாதான யாத்திரையை - சர்வசமய சமரச யாத்திரையை அவர்மேற்கொண்டார். போப்பாண்டவர்கள் இவ்வளவு காலம் அனுஷ்டித்து வந்தசம்பிரதாயத்தை மாற்றி, வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்டதன் மூலம் போப் பால்,புதிய திருப்பம் ஒன்றை இதன் மூலம் ஏற்படுத்தினர். கத்தோலிக்க சரித்திரத்தில் இது முக்கிய சம்பவம்.

★

## தென்வியட்நாம்

சென்ற ஆண்டு முக்கிய நிகழ்ச்சிகளில் தென்வியட் [illegible] அமெரிக்க உயர் ராணுவ அதிகாரி ஜெனரல் மாக்ஸ்வெல் டெய்லர் சைகோனில் அமெரிக்க தூதுவராக நியமிக்கப்பட்டபின், வியட்காங்குகளுக்கெதிரான தாக்குதல் பலம் அதிகரித்திருக்கிறது. அதேபோல் வியட்காங் தாக்குதல்பலமும் அதிகரித்திருப்பதால் மீண்டும் இழுபறி ஏற்பட்டது. மேலும் நாட்டின் உள்நாட்டு அரசியல், கெடுபிடி நிலையில் இருக்கிறது சிவில் ராணுவ அதிகாரிகளுக்கிடையே அபிப்பிராயபேதம் அரசாங்கம் பொதுமக்களிடையே தகராறு. டொன்கின் குடாவில் அமெரிக்க நாசகாரிகள் தாக்கப்பட்டதும், அமெரிக்க பதில்தாக்குதலும் அங்கு நிலைமையை மாற்றவில்லை. வடவியட்னும் மீது பாய்வதா வேண்டாமா என அமெரிக்கா இன்னும் உறுதியாகத்தீர்மானிக்கவில்லை. நீண்டகால யுத்தத்தின் மூலம் எதிரிகளைக் களைப்படையச் செய்து யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தலாம் என இரு சாராருமே நினைப்பதுபோல் தோன்றுகிறது.

★

## மலேஷியா

மலேஷியாவை ஜனவரி 1-ம் திகதிக்குள், அதாவது சென்ற ஆண்டுக்கடைசியில் நசுக்கிவிடலாம் என சுகர்னோ திட்டமிட்டிருந்தாராயினும் அப்படிச் செய்யமுடியவில்லை. கோஷ்டி கோஷ்டியாக இந்தோனேஷிய ஊடுருவல்காரர்களை மலேஷியாவில் இறக்கி, அவர்களை ஒன்றுகூடச் செய்து அங்கிருந்து தாக்குதலை நடத்த சுகர்னோ தீர்மானித்தார். ஆனல் மலேஷிய பாதுகாப்பு படையினர் உடனுக்குடன் களையெடுப்பு வேலையை மிகவும் வெற்றிகரமாகச் செய்து வருவதால் சுகர்னோவின ஆசை குறிப்பிட்டகாலத்துக்குள் நிறைவேறவில்லை

அதேசமயம் சுகர்னோவின் உடல்நலம் குன்றிவருவதாகச் செய்திகள் கூறுகின்றன. அவருக்குப் பின் அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டியில் கம்யூனிஸ்ட் கட்சியும், இதர அரசியல் கட்சிகளும் போட்டியிட்டு வருவதாகத்தெரிகிறது. சென்ற ஆண்டு கெடுபிடிக்குள்ளான முக்கிய விஷயங்களில் ஒன்று மலேஷியாவாகும்.

★

## சீனா-ரஷ்யா

சென்ற ஆண்டு சீனா-ரஷ்யா அபிப்பிராயபேதம் உச்சநிலையை அடைந்தது. இரு சாராரும் ஒருவருக்கொருவர் சேற்றை வீசிக்கொண்டனர். ரஷ்யத்தலைவர்கள் மீது பீகிங் தலைவர்களும், பத்திரிகைகளும், வானெலியும் பெருந்தாக்குதல் நடத்தின. திரு குருஷ்சேவ் வீழ்த்தப்பட்டது சீனவுக்கு மகிழ்ச்சியளித்ததெனினும் அவருக்கு வாரிசாக வந்தவர்கள் பழைய கொள்கையையே பின்பற்ற ஆரம்பித்தது சீனவுக்கு எரிச்சலை மூட்டியது.

அதேசமயம் சீனப்பிரதமர் சூஎன்லாய் மேற்கு, கிழக்காபிரிக்க நாடுகளுக்கு சுற்றுப்பிரயாணம் செய்தார். அங்கு பல நாடுகளில் அவருக்குவரவேற்பு கிடைக்கவில்லை. மற்றும் சில நாடுகள் சீனக் கொள்கையை பகிரங்கமாகக் கண்டித்தன. ஆபிரிக்காவில் இந்தியாவின் செல்வாக்கை ஒழிக்கமுயன்றது. [illegible] திரும்பினர். [illegible] சதிகள் பல சென்ற ஆண்டு அம்பலமாகியது என்னும் ஆபிரிக்கநாடுகள் இவற்றை நன்கு அறிந்திருக்கின்றன என்பதை பல சம்பவங்கள் நிரூபித்துவிட்டன.

## சாத்தனார் இலக்கியம் (3ம் பக்கதொடர்ச்சி)

உண்பதற்கும் - உடுப்பதற்கும் உறங்குவதற்கும் வழியின்றித் தவித்த மக்கள் நிலை கண்ட சாத்தனர்.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்'

என்று உண்டியின் அவசியத்தையும், 'பசிவந்திடப் பத்தும் பறந்திடும்' என்பதையும், 'இடும்பை கூர் என் வயிறே உன்னோடு வாழ்தல் அரிது' என்பதையும், உண்டு உடுத்து இருந்தாற்தான் இறைவனை வழிபடவோ அறத்தைப் பேணவோ முடியும் என்பதையும் மிகவும் சிறப்பாக எடுத்துரைத்ததை இன்றைய இருபதாம் நூற்ருண்டு மக்கள் மறந்துவிடக்கூடாது.பசியோடு போராடிப் புகையும் நெருப்புமில்லாமல் எரிந்துகொண்டிருப்பவனுக்கு வேத ஆகம உபதேசங்களோ - நன்னெறி செம்மைகளோ உதவாது. அவன் பசியைமாற்ற களவோ, கொலையோ, கள்ளோ அருந்த முற்படுவான். அதனுல் உண்டி கொடுத்தோரே உயிர்கொடுத்தோர் என்ற உண்மையை உலகம் உணரச் செய்தார். மணிமேகலையின் மாருத காதல் கொண்டவன் உதயகுமாரன். இறுதியில் அக்காதல் அவன் உயிரையே குடித்துவிடுகின்றது. 'காதல் இன்றேல் சாதல்' என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன் இளவரசன் உதயகுமாரன். மகனின் சோகமரணம் குறித்து சோழமன்னன் கலங்கினன், இல்லை. கதறினன் இல்லை. தீநெறியில் சென்றுசெத்தான் தன் குமரன் என்று செய்தி நாட்டில் பரவுமுன் இடு காட்டிற்கு இழுத்துச் செல்லுமாறு கட்டளை இடுகின்றன். "இவன் கந்தை என் ஹைற்றுன் கொல்" என்ற புகழ் மொழியைக்கேட்க முடியாமல் போய் விட்டதே என்றும் கவலைப்படவில்லை அவன். மற்றவர்கள் மாசுற்ற தன் மைந்தன் மரணத்தை கேள்வியுற்று தன்னையும் தன் சோழவள நாட்டையும் இகழ்வார்களே என்று அவன் இரத்தம் கொதித்தது. புன்ருறு புன் கண் தீர்த்தோனும் அரும்பெற் புதல்வனை ஆழியில் மடித்தோனும், மன்பதைக்காககும் தென்புலக் காவல் தன்னுல் பிழைத்தது என்று ஆயு துறந்த பாண்டியனும் போலல்லவா சோழ மன்னன் நடந்து கொண்டான். இவனின் நாட்டுப்பற்றையும் நன்னெறி வழுவாச் செங்கோல் ஆட்சியையும் என்னென்போம். இவ்வாறு தந்தைகளுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்கும் சோழ மன்னனைப் போற்றவும் அவன் வழி ஒழுகவும் உதவி செய்யும் சாத்தனர் தமிழினை எப்படி ஏற்றுவதென்றே தெரியவில்லை.

தந்தையை வீரனுகவும் மானத்தைக்காக்கும் மன்னனுகவும் காட்டிய சாத்தனர் தாயைப்பாசத்தின் பிறப்பிடமாய் தாய்மை உருவமாய் திகழ வைக்கிருர். தன் செல்வம் இறந்ததைக் கண்டு கண்ணீர் பெருக்கினுள் சோழவள அரசி தன் கண்மணி இறக்கக் காரணமாக இருந்த பெண்மணியை வஞ்சகம் தீர்க்க எண்ணுகிருள். தீயவன் ஒருவனை அனுப்பி மணிமேகலையின் கற்பைச் சூறையாட முயல்கிருள்.சிறைச்சாலையில் அடைக்கிருள் அது அறிவுடைய மணிமேகலைக்குத் தவச்சாலையாக மாறுகிறது. நஞ்சை ஊட்டி பைத்தியக்காரியாக்க பாடுபட்டாள். நஞ்சை வாயிலே கொணர்ந்து நண்பர் ஊட்டும் போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை என்று அகமகிழ்ந்தாள் மணிமேகலை. இவ்வளவு கொடுமைகளை எல்லாம் பொறுமைகளை எல்லாம் பொறுத்துக் கொண்டு குளிர் மதியாகக் குணமென்னும் குன்றேறி நின்றுள் மணிமேகலை 'வலக்கண்ணத்தில் அடித்தவனுக்கு இடக்கன்னத்தையும் காட்டு' என்ற ஏசுநாதன் பொன்மொழியிலும் ஒருபடி உயர்ந்தது.

"இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நல்நயம் செய்து விடல்"

என்ற வான்புகழ் வள்ளுவன் கருத்திற்கு வழிகாட்டியாக வாழ்ந்து காட்டுகிருள் மணிமேகலை.

"இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு"

என்பதைக்கண்டு அரசி பயந்தாள். தன் நெஞ்சே தன்னை சுடச் பொய்த்தபின் மன்னிப்பு வேண்டுகிருள். பின்னர் மணிமேகலையின் பெருமை அறிந்து தொழுகிருள். இந்த நிலையில் மணிமேகலை, "உயிர்கள் இடத்தில் அன்புவேண்டுமென்றும் அன்பின் மகிமையையும், மன்னுயிரைத் தன்னுயிர்போல் மதித்து அன்பு செலுத்தினுல் உன் மகனுக்கும் அன்புபோய்ச் சேரும் என்றும் அன்பின் நிலையை எடுத்தியம்புகிருள். மணிமேகலை ஒருவனை மணந்து மனைவியாய் இல்லறம்நடத்திய பின் துறவு தாங்காது, முன்னோர் செய்த பாவத்திற்கு ஈடு செய்பவன்போல் குமரித்துறவியாகக் காண்கிரேம். இல்லறக் குடியிற் பிறந்த வணிகர் பெண் நாடறிய ஆற்றல் காட்டித் தற்காத்து தற்கொண்டான் பேணித் தகைசான்று சிலப்பதிகாரத்தின் தலைவியாகின்ருள். இஃது இலக்கியப் புரட்சி. ஆனல் பரத்தை தம் தொழில் ஒன்றிய சித்திராபதியின் பேத்தி மணிமேகலை காவியத் தலைவியாகின்ருள். உணர்ச்சியையும் உள்ளத்தையும் பண்படுத்தி உலகெல்லாம் ஒளிகரும் தீபமாகிருள். இது முன்னையிலும் பெரும் புரட்சி. சாத்தனர் ஓர் சமூகச் சீர்திருத்தவாதி. சமூகம் முன்னேற வேண்டும், ஊழல்களும் உதவாக் கட்டுப்பாடுகளும் ஒழிய வேண்டும் என்றுபாடுபட்டவர். பரத்தையர் குலம் ஒழிய வேண்டுமென்றும் பரத்தையர் இல்லறக் கிழத்திகளாகப் பண்புடன் வழவேண்டும் சமூகம் சிறக்க வேண்டும் என்று சதா கனவுகண்டவர்.

'கள்ளும் பொய்யும்
காமமும் கொலையும்
உள்ளக் களவுமென்
றுரவோர் துறந்தவை
தலைமையாக் கொண்டதின்
தலைமையில் வாழ்க்கை
புலமை யென்றஞ்சிப்
போர்த்த பூங்கொடி

எல்லாக்குற்றமும் விளைவிப்பது பரத்தைக் குலமென்றும், அங்கு கள்ளும், பொய்யும், காமமும், கொலையும் பிறக்கின்றன என்றும், அதனைக் குணமாகக்கொண்டு பரவும் ஒரு கூட்டம் இருப்பது இழிவு என்றும் அவர் தம் கொள்கையை நூலின் பல பகுதிகளிலும் சுட்டிக்காட்டியுள்ளார். சீர்கெட்டு வாழ்ந்த சித்திராபதியும் முடிவில் திருந்தினள் என்று சாத்தனர் செய்யும் சீர்திருத்தம் வரவேற்றற்குரியது பரத்தை ஒழிப்போடு, மதுவொழிப்பு-சாதியொழிப்பு என்றனைய சமுதாயச் சீர்திருத்தங்களின் களஞ்சியமாக இலங்குகிறது இக்காவியம். எனவே மணிமேகலைக் காவியத்தைக் கற்குங்கால் புத்தமதத்தைப் பரப்ப நினைத்தார் வணிகனுர் என்ற தோற்றம் நமக்குப் புலப்படவில்லை. சீர்திருத்தத்திற்குப் பெயர்போன அம்மதத்தைக் கருவியாக வைத்து மக்களையும் வழ்வையும் சீர்திருத்த முனைந்தார் என்றே நூற்போக்குக் காட்டுகிறது. சமுதாய ஊழல்களையும் மாந்தர்களின் சமுதாய நோக்கத்தையும் சீராக்க எழுந்த "சாத்தனர் தமிழ்" ஓர் பொது மறை நூல். உலகத்து உள்ளத்தார் உள்ளங்களில் எல்லாம் ஒளிதந்து கொண்டிருக்கவேண்டிய ஓர் ஒப்பற்ற நூல் என்பதையும் குவலயத்தோர் அனைவரும் அதனவழி கடைப்பிடித்தொழுகின தீயவை நீங்கித் தெய்வீக வாழ்வு அடைவர் என்பதையும் மறந்துவிடக்கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# லீலா!

இப்பொழுது

விற்பனையாகிறது!



## தமிழுலகின் ஒரே சித்திரக் கலண்டர்


# லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

பல கவர்ச்சிகரமான வர்ணங்களில் சித்திரங்கள் ஜொலிக்கின்றன!

புதுமையான தயாரிப்பு!!

அருமையான பதிப்பு!

## சகல சமய சமரசக் கலண்டர்



ஆசிய ஜோதி — சர் பொன். இராமநாதன் — கலைப்புலவர் நவரத்தினம் — இக்பால் — ஸ்ரீவிக்கிரம ராஜசிங்க — அஹிம்சா மூர்த்தி

சர்வமத போதகர்கள் – தேச பக்தர்கள் – அரசியல் தலைவர்கள் - தத்துவஞானிகள் - ஆராய்ச்சியாளர்கள் - கலைக்
கோவில்கள்-உலக அதிசயங்கள்-இந்து-முஸ்லிம்-கிறிஸ்தவ மக்களின் நாளாந்தம் தேவையான விபரமான குறிப்புகள்
யாவும் கொண்ட கலண்டர் லீலா ஒன்றே!

**365 நாட்களுக்கும் 365 சித்திரங்கள் நாளாந்தம் காட்சி தருகின்றன.**

இலங்கையடங்கிலும் கிடைக்கும்

## லீலா டயறிகள்:

அழகான விதவிதமான ரகங்களில் அன்றாட நிகழ்ச்சிகளையோ–குறிப்புகளையோ - எழுதிக்கொள்வதற்கு விசேஷமான டயறிகள்.

நியாயமான விலை!!

நேர்த்தியான பதிப்பு!

### சமூக உணர்ச்சியை ஊட்டும் மகத்தான தேசிய சொத்து

சமுதாயப் பற்றைத் தூண்டி, ஆண்டுதோறும் துணிவுமிக்க, வீர உணர்ச்சியைக் கிளறிவிட்டு, புதிய புதிய மறைந்த - மறந்த விஷயங்களைத் தேடித்தேடி நாள் தோறும் மக்கள் முன்னால் சமர்ப்பிக்கும் லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர், எதிர்காலப் பரம்பரையினருக்குச் சமூக உணர்ச்சியை ஊட்டி, முன்னணிக்குக் கொண்டுவந்து பணியாற்றுகிறது.


கடுதாசி பற்றுக்குறைவினால் குறித்தளவு கலண்டர் - டயறிகளே தயாராகியுள்ளன.
வியாபார அன்பர்கள் அதற்கான ஒழுங்குகளைச் செய்து கொள்ளவும்.

# லீலா ஸ்டோர்ஸ்,

249, நொறிஸ் வீதி,
போன்: 5924


கொழும்பு-11.
தந்தி: காங்கேயன்.

யாழ்ப்பாணத்தில் தொகை வியாபாரிகள்:




## செ. ஆ. செல்லையா அன் கம்பெனி

110, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாயிறு கதை மலர்

# மாப்பசான் கதை
# நிலவு

— தமிழில் தருபவர்: வ. குகசர்மா —

அவர் மெலிவான உயர்ந்த தோற்றமுடையவர். தம் சமயத்தில் பேரபிமானமுடையவர். ஆனால் நீதியுடையவர். அவர் ஒரு மதகுரு. அவருடைய நம்பிக்கைகள் உறுதியானவை. தடுமாற்றமில்லாதன. தான் கடவுளைப் பற்றி நன்றாக அறிந்திருப்பதாக அவர் கருதினார். கடவுளுடைய விருப்பத்தை வெளியாருக்கு எடுத்துக்கூறும் ஒருவராகவே அவர் தம்மை மதித்தார்.

தமது தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கும்போது ஒரு கேள்வி அடிக்கடி அவர் மனதில் எழும். "கடவுள் ஏன் அப்படிச் செய்கிறார்" என்பதே அந்தக் கேள்வி. பின்பு, தான் கடவுளின் இடத்தில் இருப்பதாக நினைத்துக்கொண்டு எளிதில் அறிய முடியாத அக்கேள்விக்குப் பதிலை ஆராய்வார். அதற்குப் பதில் கிட்டி வருவதாகத் தோற்றப்படும். "பிரபுவே, உமது செயல்கள் சிந்தைக்கெட்டாதவை நான் கடவுளின் ஊழியன் கடவுளின் செயல்களுக்குரிய நியாயத்தை நான் அறிய வேண்டும். அறியமுடியாது போனால் அனுமானிக்கவாவது வேண்டும்." இவ்வாறு அவர் தமக்குள் கூறிக்கொள்வார். பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பொருளும், அவருக்கு அளவில்லாததும் வியக்கத்தக்கதுமான கருத்துக்களையுடையதாகத் தோற்றியது. "ஏன்" என்ற கேள்வியும் "அதற்காக" என்றவிடையும் அவர் மனதில் எழுந்தபடியேயிருக்கும். காலை நேரம், மகிழ்ச்சியுடன் நித்திரை விட்டெழ உதவுகிறது. பகல், வேலை செய்வதற்குரியது. மாலை, ஒருவன் நித்திரைக்குத் தயார் செய்யும் சிற்றலாக்காலம். இரவு நேரமோ நித்திரை செய்ய உதவுகின்றது. மழை பயிர்களுக்கு நீரைக் கொடுக்கிறது. பலவித பருவகாலங்களும் பயிர்ச் செய்கைக்கு உதவுகின்றன-என்று இப்படி எல்லாம் அவர் எண்ணினார்.

அவர் பெண்களை அளவு கடந்து வெறுத்தார். "பெண்களே, உங்களிடம் எனக்கு என்னவேலை?" என்ற யேசுநாதரின் வாக்கியத்தை அவர் அடிக்கடி தமக்குள்ளே கூறிக்கொள்வார். "இறைவனே, தான் பெண்களைப் படைத்துவிட்டதைப் பற்றி இன்றைக்கும் வருந்துகிறார் என்றால் அதிகம் சொல்வானேன்? பெண்கள் பன்னிரண்டு பங்கு பாவம் செய்தவர்கள்" என அவர் கூறுவார். பெண் முதல்மனிதனைத் தன் வலையில் அகப்படுத்தினாள். வெறுக்கத்தக்க அத்தொழிலை இன்று பரியந்தம் செய்துவருகிறாள். என்பது அவர்கருத்து. பெண் உறுதியற்றவள்; ஆபத்தானவள் எனச் சொல்வார். அவளின் உடலை மாத்திரமல்ல அவ்வுடலில் உள்ள உயிரையுமே அவர் வெறுத்தார்.

பெண்களுள் மிருதுத்தன்மை இருப்பதை அவர் உணர்ந்தார். தான் உணர்ச்சிகளால் தாக்கப்படாதவர் என்பது அவருக்கு நன்கு தெரியும். ஆனால் பெண்கள், ஆண்களின் இருதயத்துள் தங்கி நீங்காமல் நிலைபெறும் அன்புத் தன்மையைக் கண்டு அவர் ஆத்திரமடைந்தார். கடவுள், மனிதரை உணர்ச்சி வசப்படுத்துவதற்கும், பரீட்சை செய்வதற்குமே, பெண்களைத் தோற்றுவித்தார். பெண்களை அணுகுமுன் தக்க பாதுகாப்புடன் அணுகவேண்டும். அவர்கள் பதிவிருந்து தாக்கும் பகைவர் போன்றவர்கள். பொறிபோன்றவர்கள். அவர்கள் கரங்கள் மக்களை நோக்கி நீட்டப்பட்டுள்ளன. இதழ்கள் திறந்துள்ளன—இவ்வாறெல்லாம் சுவாமியாரின் சிந்தனைகள் ஓடும்.

தவவேடம் கொண்ட பிரமசாரிணிகளைப்பற்றி இந்த மதகுரு ஓரளவு நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்தார். ஆனால் அதுவும் ஓரளவுக்குத்தான். தான் ஓர் மதகுருவாயிருக்கும் தன்னிடம் இன்னும் நிறைவற்றிருக்கும் தயையும், சீலமும் பிரமசாரிணிகளின் கண்களில் பிரதிபலிப்பதைக் கண்டார். அவர்களின் இயல்பான பணிவோடு யேசுநாதரிடம் அவர்களுக்கு உள்ள உள்ளமுருக்கும் பக்திகூட அவரை ஆத்திரமடையச் செய்தது. ஏனென்றால் அப்பெண்களுடைய கீழ்ப்படிவுள்ள வார்த்தைகளிலும், கீழ்நோக்கிய கண்களிலும், அடக்கத்திலும் விரகதாபம் இருப்பதாக அவர் கருதினார்.


இந்த மதகுருவுக்கு ஒரு மருமகள் இருந்தாள். அவளைப் புனித சேவையில் ஈடுபடுத்த வேண்டிய பொறுப்பு அவருக்கேற்பட்டது. அப்பெண் நிலையில்லாத சிந்தனையுடையவள். அவளை மதசேவகியாக்கும் மதச்சடங்குகள் ஆலயத்தில் நடந்தபோது அவள் நகைத்தாள். மதகுரு இறைவனைப் பற்றிப்பேசியபோது அவள் நீலவானத்தைப் பார்த்தாள், பசிய புல்லினைப் பார்த்தாள். மலர்களைப் பார்த்தாள். அவள் கண்களில் உணர்ச்சி மின்னியது. சில வேளைகளில் அவள் ஒரு அழகிய பறக்கும் பூச்சிக்குப்பின் ஓடி அதைப் பிடித்து வருவாள். "மாமா, இந்தப் பூச்சியின் அழகைப்பார்த்தீர்களா? இதை முத்தமிட என் மனம் விரும்புகிறது" என்று கூறுவாள். அழகிய பூச்சிகளை, அழகிய மலர்க் கொத்துகளை முத்தமிட அவள் விரும்புவது மதகுருவுக்கு மன எரிச்சலையும் அதே சமயம் கவலையையும் உண்டாக்கும். இவையெல்லாம் பெண்கள் மனதிற் பிறக்கும் அழிக்கமுடியாத ஆசைகள் என்பது அவருக்குத் தெரியாததல்ல.

ஒருநாள் கோவில்காவற்காரனின் மனைவி மதகுருவிடம் அவரின் மருமகளுக்கு ஒரு காதலன் இருப்பதாகக் கூறினாள். அப்போது அவர் முகச்சவரம் செய்து கொண்டிருந்தார். அவள் கூறியதைக்கேட்டு திகைத்துப் போய்ச் சற்று வேலை செயலற்று இருந்தார். சவர்க்கார நுரை அவரது முகத்தில் இன்னமும் அப்படியே இருந்தது. அவருக்கு பேசவும், நினைக்கவும் சக்தி மீண்டவுடன் "அது உண்மையல்ல; நீ பொய் சொல்லுகிறாய்" என்று கத்தினார். ஆனால் உண்மையுள்ள அந்தப் பெண் தனது ஒரு கரத்தை தன் நெஞ்சின்மேல்வைத்து "நான் உண்மையே பேசுகிறேன். அவள் உங்கள் தங்கை நித்திரையானவுடன் நாள் தப்பாது தன் காதலனிடம் செல்கிறாள். அவர்கள் ஆற்றங்கரையில் ஒவ்வோர் இரவும் சந்திக்கிறார்கள். நீங்கள் இரவு பத்துமணிக்கும் நடுச்சாமத்திற்குமிடையில் அங்கே சென்று நேரிற்காணுங்கள்" என்று கூறினாள். இதன்பின் குருவானவர் தம் தாடியை கைவிரல்களாற் தடவியபடி அறையுள் அங்குமிங்கும் அமைதியற்று நடந்தார். பின் திரும்பவும் முகச்சவரம் செய்யத் தொடங்கினார். பதற்றத்தினால் அவர் முகத்தில் பல காயங்கள் உண்டாயின.

அன்று முழுதும் அவர் அதிகம் பேச்சில்லாமல் மௌனமாக இருந்தார். அவர் மனம் வெறுப்பு, கோபம், முதலிய உணர்ச்சிகளால் [illegible]ந்தது. காதலுக்கு எதிராகப் போராடும் புனித தத்துவம் ஒருபுறமிருக்க உயிர்களை நல்வழியில் செலுத்தும் ஓர் ஆசிரியர், தந்தை என்ற பொறுப்பு உணர்ச்சிகளும் அவரை வருத்தின. ஒரு ஜீவன் தன்கொள்கைகளைக் கொள்ளையடித்துவிட்டதாக, வென்றுவிட்டதாக அவர் கருதினார். பகற் போசனத்தின் பின் அவர் படிக்க முயற்சித்தார். ஆனால் அவரால் முடியவில்லை. நேரம் செல்லச் செல்ல அவர் மனம் கோபத்தால் துடித்தது. இரவு பத்து மணி அடிக்கவும், அவர் தனது கைத்தடியை எடுத்துக்கொண்டார். உறுதி வாய்ந்த கைகளினால் அதைச் சுழற்றி திடீரெனத் தன்பற்களைக் கடித்துக்கொண்டு ஓர் கதிரையின்மேல் அடித்தார். கதிரையின் பின் பக்கம் இரண்டாகச் சிதறிக் கீழே வீழ்ந்தது. அவர் வெளியே நடப்பதற்காக கதவைத் திறந்தார். வெளியில் வெண்ணிலா அள்ளித் தெளித்திருக்கும் கோலத்தைக்கண்டு அவர் ஆச்சரியமடைந்தார். அப்பொழுது கனவு காணும் ஒரு புலவனின் உணர்ச்சிகளையடைந்தார் அவர். இராக்காலமும் நிலவும் சேர்ந்து உண்டாக்கிய அந்தச் சிறந்த அழகு அவர் மனதை மென்மை அடையச் செய்தது. அவருடைய சிறிய தோட்டம் நிலவு வெள்ளத்தில் ஆழ்ந்திருந்தது. பழமரங்கள் யாவும் பசுமையில் பொலிந்து தோற்றமளித்தன. மஞ்சள்நிறமலர்களையுடைய கொடிகள் சுவர்களின் மேல்படர்ந்து நறுமணத்தை வீசிக்கொண்டிருந்தன. அவற்றின் தலைகள் அந்தரத்தில் பரிசுத்த ஆன்மாக்களைப்போல் வட்டமிட்டன.

குடிகாரர் மதுவை உறிஞ்சிக் குடிப்பது போல, அவர் காற்றை ஆழமாக இழுத்துச் சுவாசித்தார். ஆச்சரிய உணர்வுடன் ஓரளவு தன் மருமகளை மறந்தவராகி நடக்கத் தொடங்கினார். ஓர் வெளியான இடம் போய்ச்சேர்ந்தார். தவளைகள் பல ஏககாலத்தில் கீதம் பாடின. வஞ்சிக்கும் நிலவொளிக்குச்சாதகமாக வானம்பாடிகள் சோககீதம் இசைத்தன. இவை அவரின் சிந்தனைகளைத்தூண்டியது. அவர் மேலே நடந்து சென்றார். தம்மனதிடம் குறைவதை உணர்ந்தார். ஏன் என்றே அவருக்குப்புலப்படவில்லை அவர் அங்கேயே தங்கி இருக்கவிரும்பினார். கடவுளுக்கு, அவரின் படைப்புகள் யாவற்றிற்கும் நன்றி கூறினார். அவர் சென்ற இடத்துக்கருகில் ஆறுவளைந்து சென்றது. சந்திரன் ஒளியில் அதன் நீர் உருக்கிய வெள்ளி எனப் பிரகாசித்தது. மதகுரு தம்முன் இருக்கும் இருதயத்தை ஆழமாக ஆராய்ந்து பார்த்தார். அவர்மனம் குழப்பமுற்றது.


(9-ம் பக்கம் பார்க்க)



விவேகமுள்ள தாய்மார்,
தங்கள் குழந்தைகளின் சுகவளர்ச்சிக்கு
ஒஸ்டர்மில்க்கையே நம்புகிறார்கள்

தாய் பால் ஊட்ட முடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமற்போகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்பமுடியும்.


தூய்மை மாறுத்தன்மையுடைய ஒஸ்டர்மில்க், ஆரோக்கியமளிக்கும் ஓர் பால் ஆகாரம். பச்சிளங் குழந்தையின் மென்மையான வயிற்றுக்கு பாதுகாப்பானது. இரும்புச்சத்தும், விட்டமின் Dயும் உள்ளிட்டு அமைக்கப்பட்ட ஒஸ்டர்மில்க், குழந்தையை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும், வளரச்செய்கிறது.




நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாக
குழந்தைகள் வளர்ந்து திகழ ஒஸ்டர்மில்க்.

ஒஸ்டர்மில்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




— கவியோகி சுத்தானந்தபாரதியார்—

## காட்சி — 14

(போர்க்களம் ... குண்டுகள் பறக்கின்றன ... அணுகுண்டுச் சாலை, ஒரே புகைமயமாயுள்ளது ... தேவகி, நியூட்ரன் சோதனை செய்கிறாள் ...அருகே யுரேனியம் சைக்ளோட்ரோன் (அணுமுறி) யந்திரத்தில் பொடிபடுகிறது... இரவு பன்னிரண்டு...எல்லோரும் உறங்குகின்றனர்...)

தேவகி. சுவர்க்கத்திலிருந்து நரகத்திற்கு வந்தேன். இதென்ன விஞ்ஞானம்...? என்ன அணுயுகம்...? என்ன ஐரோப்பிய நாகரிகம்...? ஆளை ஆள் ஒழிக்க அணுவசனம் விடும் அழிநாகரிகத்தை எப்படி ஆண்டவன் பொறுத்திருக்கிறான்...இந்த வெள்ளையருக்கு மூளை அபாரம்—ஆனால் உள்ளம் இரும்புப்பாரம்-வியாபாரம்!... லண்டனில் அணுவிஞ்ஞானம் தேர்ந்து அப்பாவுக்கு உதவ ஊர்போவோம் என்றால், இந்தப் பயங்கரப் போர்மூண்டு, எங்களை இரத்த நரகத்தில் அடிமையாக்கியதே...ஐயோ, இதைவிட்டு வெளியேற வழியில்லையோ...? டிங்டிங் சொற்படி நடக்கவேண்டும்... அவன் அணுச்சாலைத் தலைவன், இராணுவ முரடன். அவன் ஹம்... என்றால் உடனே என் உடம்பு மின்சாரத்தீயில் வெந்து, சாம்பலாகும் ... இப்படி எத்தனை பேர் சாம்பலாயினர் ... எத்தனை கொலைகளைக் கண்டேன்!...யார் வருவது...?

(வருதல், டிங்டிங்-முழுக்குடியில்)

டிங்டிங்: "கம் மை லவலி டவ், க்விக்லி எம்ப்ரேஸ் மி சௌ... (இப்போது என்னை விரைவில் அணையவா...என்று அவன் கையைப் பிடித்து ஜோடிநடனமாடி அணைகிறான்)

தேவகி: ஐயையோ ... இந்த ராக்ஷஸ பிண்டம் என்னுயிரைப் பிழிகிறதே ... ஆண்டவனே, எனக்கு யார் துணை...? எதிர்த்தால், பிணமாவேன்... என்ன செய்வேன்...?

டிங்டிங்: (முத்தமிட்டு) "ஓ மை சாமிங் இன்டியன் ஃபைரி... மேரி மி, ஐ அம் இன் எ ஹரி..." (கல்யாணம் செய்துகொள் கட்டழகுக் கன்னியே)

தேவகி: மிஸ்டர் லவ்லி டிங்டிங், உலகம் உயிருக்குப் போராடுகிறது ... இப்போது தேசம் நாசமாகிறது ... இப்போது, நாம் தேசசேவையில் ஈடுபட வேண்டும்... கல்யாணப் பேச்சு, பிறகு... தயவுசெய்து மன்னிக்கவும் ... காப்டன் டிங்டிங், என்கடமை கெடுகிறது... தேசத்திற்கும் கடமைக்கும் நடுவே நிற்பது நன்றாயில்லை...

டிங்டிங்: ஆம் ஆம் ... லவ்லி டவ், முன்னே போர், பின்னே கல்யாணம்... அதைத் திருப்பிப் படிக்கவேண்டும்...

(பின்னால் தபுடல் சத்தம்-கூக்குரல் ... ஓட்டம் ... ஐயோ தீ...தீ... அணுவெடிபபு... டேஞ்சர் டேஞ்சர் ... அபாயம் அபாயம்... தபபுங்கள்...! டிங்டிங் ஓடிப்போகிறான்)

(வருதல், அமுதன்)

அமுதன்: தேவகி, உனக்காகவே வந்தேன்...உடனே ஓடு ஓடு...ஓடு என் பின்னே... இன்னும் பத்து நிமிடத்தில், இந்த அணுச்சாலை வெடித்து எல்லாரும் சாவார்கள் ... ஓடு ஓடு... ஒரு டாங்கில் ஏறிக் கலே செல்வோம்... அங்கிருந்து அமெரிக்காவுக்கு விமானம் ஏற்பாடு...

தேவகி: பகவானே காப்பாற்றினாய் ... அமுதம், ஓடு ஓடு...

(செல்லல்...வருதல், மெர்ரி ஜேன்...)

மெர்ரி: அம்டன், அம்டன்... ஓ மை அம்டன் ...மை லவர் அம்டன்...மை அபாலோ அம்டன்...வேர்...வேர் யு ஆர்..."

(இதற்குள் அணுச்சாலை வெடிக்கிறது. மெரி ஆடை தீப்பிடிக்கிறது. அவளைக் குண்டு, ஆகாயத்தில் தூக்கி அடிக்கிறது ... அவளைக் காக்க வந்த டிங்டிங்கும் முதுகில் அடிபட்டு மல்லாக்கிறான்...)

மெர்ரி: ஹா, அம்டன்...

டிங்டிங்: ஹா, லவ்லி டவ்...

மெர்ரி: ஹா, அம்டன்...உன்னைத் தழுவி இறக்கிறேன்...!

(டிங்டிங்கைத் தழுவிக் கொண்டு சாகிறாள்...)

## காட்சி — 15

### குருவை நாடல்

மின்சாரம், அல்பா, பர்வதம், அன்புவல்லி பரவசமாய்ப் பாடுதல்)

"நீயல்லால் எனக்கொரு
நிலையில்லை..."

(கீர்த்தனஞ்சலிப் பாட்டு... தியானம்...ஓங்காரம்...)

மின்சா: அப்பா ...! ஆத்ம சுகமே சுகம் ... தெரிகிறது ... ஆனால் இன்னும் மனம் நிலைக்கவில்லையே...!

அல்பா: தியானத்தால் ஆத்மாவைக் காணலாம் என்று கீதைசொல்லுகிறதாம்...சொல்கிறார்கள்... ஆனால் என் மண்மூளையில்எட்டவில்லை... இங்கே தியானம் என்று கண்ணைமூடினால், இங்கே எரிந்துபோன அணுச்சாலையும், அங்கே எரிந்துபோன அணுச்சாலையும் போரும் பிணக்குவையும் மூளையைக் கலக்குகின்றன ... நான் 'கடவுள் கடவுள்' என்றேன்... மூளை 'சடவுள் சடவுள்' என்கிறது.. சடவிஞ்ஞானம் உள்ளே சுழல்கிறது....

மின்சா: ஆமாம் பிரதர், ஆமாம் பிரதர்...என்மூளை அமுதனைத் தேடி பாரிஸ் அணுகுண்டுச் சாலைக்குப்போகிறது... அன்புவல்லி, உன்னைப்போல நிம்மதியாக வழியென்ன...?

அன்பு: குருநாதர் அருள் வேண்டும்...

அல்பா: நானும்எத்தனையோ குருநாதரைப் பார்த்தேன். காஷாயம் கட்டின குருநாதர்கள் கணக்காகச் சாப்பிட்டுக் 'கண்டவர் விண்டிலர்' என்று தூக்கம் போட்டு அதுவே நிர்விகல்ப சமாதி என்கிறார்கள்... இந்த இழவெல்லாம் பார்த்த பிறகுதான், விஞ்ஞானத்தைப் பலமாகப் பற்றினேன்...யாராவது நல்லகுரு இருந்தால் சொல்லம்மா...!

அன்பு: யோகசமாஜம் யோகேந்திரர் ஒருவர், எனக்குத் தெரிந்து சக்திபெற்ற மகான். அவர் முன்னிலையில் அமர்ந்தாலே பிரம்மாகார விறுவிறுப்பை உணரலாம். ஆனால் குருவைச் சரண்புகுந்து, அடக்கமாக நடந்துகொள்ளவேண்டும் ...

பர்வ: ஆம், யோகேந்திரரே உத்தம மகரிஷி... அவர் எத்தனையோ அன்பருக்கு ஆத்மீக வழிகாட்டியிருக்கிறார்; அவரை உலகெல்லாம் அறியும்... அவர் இந்த மாதமே அமெரிக்கா செல்வதாகப் பத்திரிகைகளில் கண்டேன்.

மின்சா: நானும் கேள்விப்பட்டுள்ளேன். என் அகம்பாவத்தால், அந்த மகானைப் பார்க்கமல் அணுமாயத்தில் ஆழ்ந்தேன். இன்று மாலை சென்று அவரை வணங்கலாமே...

அன்பு: ஆம்... 'குருநாதன் அவனே...'

(எல்லோரும் செல்லல்)

## காட்சி—16

(யோகசமாஜம் ... அன்பர் பஜனை ... மின்சாரம், அல்புவல்லி, பர்வதம், அல்பா-கூடப்பாடுதல்)

யோகி: 'சன்மார்க்கம் இது சகத்தீரே...!' (கீர்த்தனஞ்சலிப்பாட்டு—405)

மின்சா: குருநாதா இதுவே நல்ல உபதேசம் ... தங்கள் சன்னிதானத்தில் என்னுள்ளம் திறந்தது ... சுத்தசக்தி என்னுடன் கலந்தது...

அல்பா: இன்றுதான், என் மனம் அடங்கியது. அமைதி நிலவியது...

அல்பா, மின்சா: குருநாதா, இனிப் புதுவாழ்வு தரவேண்டும்...

"புதுவாழ்க்கை தரவேண்டும்..."

(கீர்த்தனஞ்சலிப் பாட்டு—445)

யோகேந்: அன்பர்காள், ஒவ்வொரு நாளும் புதுப்புதுமலர் போல் புதுப்புது இன்பங் காணவேண்டும் ... மனித வாழ்க்கை ஒரு தெய்வக்கலை... அது உள்ளிருந்து மலரவேண்டும்... அதற்கு யோகசாதனமே வழி. சாதிமதி சாத்திரகோத்திர பேதங்களை மறந்துவிடுவோம்...உள்ளம் ஒன்றி உணர்வதே, யோகம்...எச்சாதி எம்மதத்தினராயினும், கல்லாரும் கற்றோரும் யோகவுணர்ப்பிபெறலாம் ... அதற்கு முதலில் மனமொழி மெய்த்தூய்மை வேண்டும் ...தூய்மையால் உள்ளத்தில் அமைதியுண்டாகும்... தெளிவு உண்டாகும் ... ஞான சம்பந்தம் உண்டாகும்... சமதை உண்டாகும்... அதனால் மனம் உள்ளடங்கித் தியானம் நிலைக்கும். தியானம் நிலைக்க நிலைக்கச் சுத்தாத்ம சைதன்யம் சுழலும். சுத்தசக்தி விறுவிறுக்கும்...அதையே கவனித்துக் கொண்டிருந்தால், போதும்... கடவுள் உணர்வாகும்...பிறகு வாழ்வெல்லாம் ஆனந்தமயமாகும்....

மின்சா: குருநாதா, இந்த யோகசாதனத்தை நான் சாதிக்கமுடியுமா...?

அல்பா: நான்கூடச் சாதிக்க முடியுமா...?

யோகே: முடியும், முடியும்... நாங்கள் இருவரும் பௌதிக விஞ்ஞானிகள் ... விஞ்ஞானம் வேண்டும் ... அது வாழ்வை எளிதாக்கும்...ஆனால் விஞ்ஞானம் அசுரர்கையிற் சிக்கி அமர்க்களம் செய்கிறது ... அணுச்சக்தி வேண்டும்...அணுகுண்டு வேண்டாம், விஞ்ஞானத்தை மெஞ்ஞானயோகிகள் ஆண்டால் பார்முனாது. மனிதமுன்னேற்றம் விரைவாகும், யோகம் என்பது உட்பயிற்சி. விஞ்ஞானம் இயற்கையாராய்ச்சி யோகம் இறையாராய்ச்சி. உங்கள் விஞ்ஞானத்தால் மனிதவாழ்வு இனிதாக நல்லது செய்யலாம். யோகத்தால் விஞ்ஞானம் ஒளிபெறும்.

அல்பா: இந்த உபதேசமே எங்களுக்கு வேண்டும். விஞ்ஞானத்தால் உலகிற்கு உதவுவோம். யோகசாதனம் பற்றி அருளவேண்டும்,குண்டலிசக்தி எழுப்பித்தரவேண்டும்...

மின்சா: குருநாதா, தீக்ஷை தரவேண்டும் ... தங்கள் சக்தியை எம்முள் வார்க்கவேண்டும்...தியானம் நிலைக்கவேண்டும...

அன்பு: டும்டும் ... எல்லாடும்மும் ஒரேயடியாகவருமா...? முதலில் குருநாதர் குறிப்பறிந்திருங்கள்...

பர்வ: அவர் சந்நிதானத்தில் இருந்தாலே போதுமே...

யோகே: அன்பர்காள், தீக்ஷை குண்டலி தியானம் என்று பறக்காதீர்கள்...இப்படித் தொட்டால் குண்டலி, அப்படித் தொட்டால் தியானம் வந்தாலே, 'நல்ல குரு' என்று சிலர் பேசுவது தவறு. அதெல்லாம் இலக்கணம் தெரியாது படிக்காது கேள்வித்தாளைத் திருடிப் பரீட்சை கொடுப்பது போலும் ... அதனால் அறிவு வளராது. கேளுங்கள். மனதில் எத்தனையோ சங்கற்பங்களும் சம்ஸ்காரங்களும் உள்ளன. அவையெல்லாம் ஒரேநாளில் மாறமுடியாது. யோகததின் முதற்படி சித்த சுத்தம், வாக்குசுத்தம், காயசுத்தம், சித்தசுத்தியுடன் பக்தியுடன் கைங்கரியம் செய்யுங்கள்... அதனால் மனம் அடங்கும். அடுத்தது, 'சுத்த ஓம் சக்தி ஓம்' என்று சொல்லிக்கொண்டே தொண்டுசெய்யுங்கள், வாயை மூடி உள்ளம் திறக்கட்டும். பேச்செல்லாம், சக்தியை வீணாக்கும், அமைதியாக இங்கே பணிசெய்து வாருங்கள்; அடுத்த சாதனம் இயல்பாக வரும்...

மின்சா: குருதேவா, அப்படியே செய்கிறோம், ஒரு வேண்டுகோள்...இங்கே இடம் சிறிது ... எங்கள் ஆராய்ச்சி சாலையில் யோகசமாஜம்வைத்தால், நாங்கள் வேண்டிய தொண்டு செய்வோம். அந்தக் கட்டிடமும் நல்ல பயனாகும் ...

யோகே: நல்லது. அவ்வாறே, செய்யுங்கள். நாம் அமெரிக்கா சென்று வருவோம் ... ஆறுமாதம் அங்கே யோகசேவை செய்வோம் அதுகாறும், நீங்கள் யோகசமாஜத்தைக் கவனியுங்கள். இதோ ஆத்மானந்தர், சத்யார்க்கா, யோகஸ்ரீ, ஞானக்குயில், ராஜயோகினி, அருவியம்மை எல்லோரும் உள்ளனர். அவர்களுடன் சாதனம் செய்யலாம்...

அல்பா, பர்வதம், அன்பு, மின்சா: அப்படியே செய்கிறோம். இனி எங்கள்வாழ்வெல்லாம் யோகசேவையே...

எல்லோரும்: "சாதனம் செய்மனமே ..." (கீர்த்-பாட்—847)

(தொடரும்)

## 3600 பேர்களுக்கு ஒரு டாக்டர் !

உலகிலேயே மருத்துவ ரீதியான நல்வாழ்வைப்பெற்று அதிக கவனிப்புடன் பாதுகாக்கப்படும் நாடு ஒன்றுதான்! இங்கு 380 பேர்களுக்கு ஒரு டாக்டர் விதம் இருக்கிறார்! அதனால் நோய் ஒழிகிறது—வாழ்வு பெருகிறது! ஆனால் உலகிலே அதிக வைத்தியக் கண்காணிப்பே இல்லாத நாடு சூடான் நாடுதான்! இங்கு 36000 பேர்களுக்கு ஒரு டாக்டர் விதம் தான் இருக்கிறார்கள். இதனால் இங்கு நோய் மனிதர்களிடத்துப் புகுந்து விளையாடுகிறது!

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
● பெனியன்கள்
● ஸ்போட் சேட்டுகள்
● ரீ சேட்டுகள்
● கால் மேசுகள்
(Nylon & Woolen)
லேடன் இன்டஸ்ரீஸ் லிமிடெட்
7, ஆஸ்பத்திரி வீதி :: :: யாழ்ப்பாணம்

புகையிலை—வெங்காயம்—மிளகாய்—கத்தரி—தக்காளி—முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
அழுக்கணவனையும்—புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
மெற்றசிஸ்ரொக்ஸ் உடன் - டிப்ரெறெக்ஸ்
METASYSTOX DIPTEREX
கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத்தொடங்கவும்
PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T' GRAMS ROYAEL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை அரங்கம்

## காதற்ற ஊசி

1965 வருஷப் பிறப்போடு என் நண்பர் ஒருவர் புதிய தோற்றம் கொண்டவராக என்னைச் சந்திக்க வந்திருந்தார். புதிதாக மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார். இடது காதுக்குள் பஞ்சு வைத்து அடைத்திருந்தார். கண்ணாடி தான் இப்பொழுதெல்லாம கையில் கடிகாரம் கட்டுவது போலச் சர்வ சாதாரணமாக நயனசுகம் கருதி பலரும் வாங்கிப் போட்டுக்கொள்வது வழக்கமாகி வருகிறதே. அதனால், கண்ணாடியைப் பற்றி விசாரிக்காமல காதுக்குப் பஞ்சு வைத்ததைப் பற்றிக் கேட்டேன். நான் கேட்டது தான் தாமதம் நண்பர்வெடுக்கென்று காதைப்பொத்திக் கொண்டார். பிறகு மெதுவாகப் பஞ்சை எடுத்து வீசிவிட்டு "அட சாய், அதை நான் அடியோடு மறந்துபோய்விட்டேன்" என்று நிரம்பவும் சிரமப்பட்டார்.

"சங்கோஜப்படாமல் விஷயத்தைச் சொல்லும் காணும். எங்கேயாவது குண்டுவிமானங்கள் பறந்து அபாயச் சங்கு முழங்கக் கேட்டீரா, அல்லது இந்த மார்கழி இரவில் அப்படிக் கனவுகினவு ஏதும் கண்டு பதறி அடித்தீரா? அதுவுமில்லையானால் வேறேளன்ன, காது வலியா?"

"அப்படியெல்லாம் ஒன்றும் சம்பவிக்கவில்லை. இது, என் இப்போதைய குடியிருப்பு அசெளகரியத்துக்கு ஒரு சின்னம் என்று வைத்துக்கொள்ளுமன் அவ்வளவுதான்"

நான் மேலும் விடாமல் கிண்டவே அவர் விபரமாகச்சொன்னார். தான் குடியிருக்கும் வீட்டில் இடதுகாது ஐரோப்பிய சங்கீதத்தையும் சிங்களசங்கீதத்தையும் மற்றும் நத்தார் பண்டிகை ஆரவாரத்தையும் கேட்டுச் சகித்துக்கொள்ள வேண்டியிருந்ததாம். அதனால் அதற்குப் பஞ்சுவைத்து அடைத்துவிட்டு வலது காதினால் தமது ஜாகையில் காற்றில் மிதந்துவந்த சென்னை இசை விழாக் கச்சேரிகளைக் கேட்டுக்கொண்டிருந்தாராம்.

"காலையில் அவசரமாகப் புறப்பட்டு வந்ததில் காதுப் பஞ்சில் கவனம் செலுத்த மறந்து போனேன்" என்றார். முகத்தில் அசடு வழிந்தது.

"எங்கே அவ்வளவு அவசரமாகப் புறப்பட்டீர்?" என்று கேட்டதற்கு பட்டினத்தார் படம் பார்க்கப் போனேன். அப்படியே பத்திரிகைக்கடைக்கும் போய் இன்றைய காலைப் பத்திரிகைகளையும் நேற்றைய மாலைப் பத்திரிகைகளையும் ஒன்றுவிடாமல் வாங்கிவந்தேன். இப்பொழுதெல்லாம் என்னால் கண்ணாடியின் உதவியில்லாமல் அதிகம் படிக்க முடிவதில்லை. பத்திரிகை

(2-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன் 485
புனிதவதி
9-30 மட்டும்.
ஷோலா ஓர் ஷப்னம்
(ஹிந்தி)

ராஜா சினிமா
(சுழிபுரம்)
ஜெமினிகணேசன்-சாவித்திரி
நடிக்கும்
மிஸ்ஸியம்மா

REGAL — JAFFNA
NOW SHOWING
Bob Hope-Yvone De Carlo
in
A GLOBAL AFFAIR

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி — பிளாஸா
(கொழும்பு) (வெள்ளவத்தை)
மற்றும் 4 திரைகளில்
நடிகர்திலகம்
சிவாஜிகணேசன்
கொடைவள்ளல் கர்ணனாக நடிக்கும்
பத்மினி பிக்சர்ஸ்
கர்ணன்
5-வது மகத்தான வாரம்!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத
பிரபல பின்னணி பாடகர்
டி. எம். செளந்தரராஜன்
நடிக்கும்
பட்டினத்தார்
சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன் கே. சோமு

## பெற்றால்தான் பிள்ளையா?

யாழ்ப்பாணம் நாவாந்துறை வடக்கு சென் மேரிஸ் சனசமூக நிலைய முத்தமிழ் மன்ற இயல் இசை நாடகவிழா நத்தார் தினத்தையொட்டி 20-12-64 தொடக்கம் நடைபெற்றது. இத்தினத்தின் இரண்டாவது நிகழ்ச்சியாக கடந்த 27-12-64ல் 'பெற்றால்தான் பிள்ளையா?' என்ற நாடகம் நாவாந்துறை றோ. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

தெளிவும்கருத்தும் பொதிந்த இந்நாடகத்தை பார்க்கல் என்பவர் உருவாக்கியிருக்கிறார்.

கதைச் சுருக்கம் :-

ஜோன் என்பவருக்கு பாஸ்கர் என்ற குழந்தை பிறக்கின்றது. பிரசவத்தில் உதவிய டாக்டர் ரவி குழந்தையை எதிர்காலத்தில் டாக்டராக்க வேண்டுமென்று ஜோனின் மனைவியாகிய பத்மாவிடம் வேண்டுகோள் விடுக்கிறார். ஜோன் தனது வீட்டுவேலைக்காரியாகிய லதாவின் மோகத்தில் பத்மாவை உதாசீனம் செய்து லதாவுடன் வெளியேறுகிறார். பத்மா பல துன்பத்துக்கிடையில் மகனைப் படிப்பித்து டாக்டராக்குகிறாள். ஜோன் பல துன்பங்களோடுழன்று குஷ்டரோகியாகி வீடு திரும்புகையில்மனைவியின் பிணத்தையே காணுகிறான். தானும் மடிகிறான். மகன் பாஸ்கர் இருவரையும் இழந்து, சுமதியென்ற நர்ஸின் கைப் பற்றுகிறான். இரண்டு பரம்பரையைக்கொண்டு விளங்கினாலும் இக்கதை ஓரளவு குறுகிய நாடகமே.

நடிகர்கள்: செ. சேவியர்-டாக்டர் பாஸ்கர், தே. கிகோரி-நர்ஸ்சுமதி, ச. பாஸ்கல்-யோன், யோ. சந்தியோ-பத்மா, எஸ். ஆரோக்கியநாதன்-சுந்தரம், இ. சந்திரா-லதா, கி. யோசேப்-வக்கீல் வரதராஜன், கீ. பாலா-ஹோட்டல் முதலாளி, அ. யோ.யோசேப்-டாக்டர் ரவி,வி பாக்கியநாதன் வேலைக்காரன்.

நடிகர்கள் அனைவரும் இளைஞர்கள். இருந்தும் நடிப்புத் துறையில் ஒருசிலரிடம் முதிர்ச்சி ஏற்பட்டதைக் கண்டோம். பத்மா, லதா, சுமதி ஆகிய பாத்திரங்களை ஏற்றவர்கள் ஆண்களானபோதிலும் வேடப் பொருத்தமும் நடிப்பின் தரமும் பெண்மையின் மென்மையை நினைவூட்டின. ஜோன் ஆகத்தோன்றிய ச. பாஸ்கரின் நடிப்பில் சினிமாவில் எம். ஆர். ராதாவை அப்படியே பின்பற்றும்பாணி தெளிவாகத் தெரிந்தது சுயமான பாணியில் நடிப்பை இவர் மேற்கொள்வாரானால் உறுதியான இடத்தைப்பெறமுடியும். லதாவாகத் தோன்றும் சந்திராவின் நடிப்பிலும் அவரது நடனமே மேலானதாக அமைந்திருந்தது பத்மாவின் நடிப்பில் இயற்கையான உணர்ச்சிபாவம் மிளிர்ந்தது.

தீர்ப்பு:- இளைஞரானாலும் நடிப்புத்துறையில் நல்ல தேர்ச்சி பெற்றிருக்கும் இந்நடிகர்களின் ஆர்வம் பாராட்டற்குரியது. ஆனால் சுயமான பாணியோடு புதுமையான கருவைக் கதையாகக் கொண்டு நாடகங்களை அரங்கேற்றினால் எதிர்காலத்தில் வளர்ச்சிக்கு இடமுண்டு.

— இரசிகன்

## நிலவு

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக்கேள்வி அவரிடம் எழுந்தது. "கடவுள் ஏன் அப்படிப் படைத்தார்?" இராக்காலம் நித்திரைக்குரியது. ஆறுதலுக்குரியது. துக்கம், மகிழ்ச்சி முதலிய உணர்வுகளை மறக்க ஏற்பட்டது. அப்படியானால் ஏன் இந்த இரவு நானின் மறு பகுதிகளிலும் பார்க்க அழகுள்ளதாயிருக்கின்றது. ஏன் வானம்பாடிகள் இந்த நேரத்தில் பாடவேண்டும். அவை ஏன் நித்திரை செய்யவில்லை? இவை அவருக்கு விளங்காத புதிர்கள்.

அப்பொழுது புல்வெளியின் மத்தியில் இரு உருவங்கள் நடந்துவந்தன. வளைந்த மரக் கொம்பர்கள் அவர்களுக்கு மேல் நிழலிட்டன. மரநிழலினூடாக நிலவொளி அவர்கள் மேல் வீசியது. ஆண் உயரமாகத்தோற்றினான். அவன் தன் காதலியின் தோளில் ஒரு கையைப்போட்டிருந்தான். இடையிடையே அவள் நெற்றியில் முத்தமிட்டான். அவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்கள். அவ்வியற்கை அழகு தங்களுக்காகவே ஏற்பட்டது போல அகமகிழ்ந்து நின்றார்கள்.

மதகுருஅவர்களைப்பார்த்தார். தம்வினாவிற்கு எல்லாம் வல்ல இறைவன்,அவர்கள் மூலமாகப் பதில் அளிப்பதுபோன்றிருந்தது. "மனிதனுடைய காதல் உணர்வுகளைப் பூரணப்படுத்துவதற்கு இறைவன் இவ்வித அழகிய இரவுகளை உண்டாக்கியிருக்கிறார்" - அவர் மனம் தெளிவடைந்தது.

கைகோத்து நடக்கும் காதலரை விட்டு அவர் திரும்பிச் சென்றார். தான் நுழையத் தகுதியற்ற பரிசுத்தமானதோர் கோவிலில் நுழைந்து விட்டதை [illegible]

## மனிதனின் ஆதி பிறப்பிடம் ஆபிரிக்கா?

சரித்திர காலத்துக்கு முந்திய கற்காலத்தைப் பற்றி இந்நாள் வரை கிடைத்திராத அபூர்வ தகவல்கள் லிபியா தென்பாகத்தில் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் ஐ. கா. கல்வி, கலாசாரப்பிரிவைச் சேர்ந்த புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் திரிபோலியில் அதற்கான ஆராய்ச்சியை ஆரம்பித்துநடத்தத்திட்டமிட்டு அங்கு சென்றிருக்கிறார். லிபியன் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் திரிபோலி சென்றிருக்கும் இவர்-டாக்டர் டுமித்ரி கொன்ஸ்டன்டைன் பராம்கி-பீரத்திலுள்ள அமெரிக்க பல்கலைக்கழகத்தில் புராதனகால அபூர்வப் பொருள்களைக் கொண்ட நூதனசாலையின் பொறுப்பாளராகவிருக்கிறார். அத்துடன், புராதனசரித்திரத்திலும்புதைபொருள் ஆராய்ச்சியிலும் பட்டம்பெற்றவர்.

லிபியாவின் தென் பாகம் சரித்திரகாலத்துக்கு முந்திய கற்காலம் பற்றிய உபயோகமான பல உண்மைகளைத் தரவல்லதாயிருக்கிறதென்றும், மனிதனின் ஆதி பிறப்பிடம் ஆசியா அல்ல ஆபிரிக்காதான் என்றும் இவர் கருதுகிறார்.

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50. வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்

### 1965-ல் உங்களுக்கு என்ன நடக்கவிருக்கிறது?

உங்கள் கையொப்பத்துடனும், விலாசத்துடனும், ஒரு புஷ்பத்தின் பெயரையும், நீங்கள் பிறந்த ஆண்டு, திகதியையும் ஒரு போஸ்ட்கார்ட்டில் எழுதி அனுப்பி வையுங்கள். உங்களுக்கு ரூபா 2/- செலவில் (தபால் செலவு தனி) 12 மாத வருங்காலத்தில் ஏற்படக்கூடிய முக்கிய சம்பவங்களையும், ஆலோசனைகளையும் அனுப்புவோம். ஒருமுறை பரீட்சித்துப்பார்த்தால் உண்மை அறிவீர்கள். கே. கே. சாமி, கைரேகை - சோதிட - ஹோமியோபதி நிபுணர், 2, ரஞ்சன்ரோட், வெள்ளவத்தை. 1381

### வைத்தியம்

தோல் வியாதி குணப்படுத்த உத்தரவாதம். சொறி, சிரங்கு, தேமல், கரப்பன் முதலியன. சச்சிதானந்த வைத்திய சாலை, வைத்தியர் பொ. ஸ்ரீபதிசர்மா, இந்திரன் அம்பாள் கோவிலடி, துன்னாலை வடக்கு, கரவெட்டி. 1382

### தேவை

எமது "மெயிலாண்ட்" இன்டஸ்ரீஸ் ஸ்தாபனத்தில் கடமையாற்ற மனேஜர், சஷியர், பிரதிநிதிகள் தேவை. பிணைப்பணம் கட்ட வேண்டும். 12-1-65 க்கு முன் விண்ணப்பிக்கவும். C/o. ஈழநாடு. 1383

### வாடகைக்கு

கோண்டாவில் கிழக்கு தபாற்கந்தோர், புகையிரத நிலையம், பள்ளிக்கூடம், பஸ்ஸ்ராண்ட் முதலியவற்றுக்கு அருகாமையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடும், 10 பரப்புக் காணியிலிருக்கும் சகல வரும்படிகளும் வாடகைக்குக்கொடுக்கப்படும். எஸ். சி. கனகலிங்கம், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1385

### விற்பனைக்கு

மிக அரிய சந்தர்ப்பம். சிறந்த நிலையம். கச்சேரிக்கு அருகிலிருந்துபோகும் கச்சேரி கிழக்கு ரோட்டும் கொழும்புத்துறை ஆசியர் ரோட்டும் சந்திக்கும் மூலையிலுள்ளது. புகையிரத ஸ்தானத்துக்கு அண்மையிலும் பஸ் நிலையங்கள் பெரியபள்ளிக்கூடங்கள், சந்தை, சிறந்த விளையாட்டு மைதானம்ஆகியவற்றுக்குமிகச் சமீபத்திலும் இருக்கும்கடைநிலையம்,கடைசிவிலைபரப்பு6000-00 மகாலட்சுமி அருணம்பலம், நாவலர் வீதி, அரியாலை. 1372

நல்ல நிலைமையிலுள்ள EN 8000 தொடர்வரிசையிலுள்ள வோக்ஸ்வகன் Volkswagon)விற்பனைக்குண்டு தொடர்புகொள்ளவும்! விஜயானந்தன், தபால் கந்தோர், சண்டிலிப்பாய். 1392

பிளாஸா தேயிலை
பாவிப்பாளர்களுக்கு!
ரூபா 15,000
(283 பரிசுகள் காத்திருக்கின்றன)
போட்டியில் பங்குபெற இன்றே முந்துங்கள்.
விபரங்களுக்கு உங்கள் வியாபாரிகளைக் கேளுங்கள்.
பிளாஸா தேயிலை விலையில் மலிவானது,
தரத்திலும் குணத்திலும் உயர்வானது,
தேயிலை தரம் உருசிபார்க்கும்
நிபுணர்களால் பரிசோதித்து அடைக்கப்பட்டது.
இன்றே வாங்கிப் பருகி ஆனந்தமடையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கு நில வரியை நீக்குவாராம்

## கிளிநொச்சியில் திரு. குமாரசாமி வாக்குறுதி

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சிப் பகுதியில் விதை நெல் இல்லாமல் கஷ்டப்படும் விவசாயிகள் தங்கள் கிராமசபைத் தலைவர் மூலம் தங்கள் பெயர் விபரங்களைத் தமக்குத் தெரிவித்தால் மந்திரியுடன் பேசி இப்பொழுது வசூலிக்கப்படும் ஏக்கருக்கு ஆறு ரூபாய் வரியை இல்லாமல் செய்வதாக இன்று பிற்பகல் கிளிநொச்சிச் சந்தையில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பில் கிளிநொச்சியில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடும் திரு. வி குமாரசாமி கூறினார்.

முறிகண்டிப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற அபிஷேகத்தின் பின் ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட திரு. குமாரசாமி மேலும் பேசுகையில், கிளிநொச்சிப் பகுதிக்கு மகாவலிகங்கையை வடமத்திய மாகாணத்துக்கு ஊடாகக் கொண்டுவருவதில் கஷ்டமில்லையென்றும் தம்மைத் தெரிவு செய்து அனுப்பினால் தமது முதல்வேலையாக மகாவலி கங்கையை வடக்கே திருப்பும் முயற்சியில் ஈடுபடுவாரெனவும் கூறினார். கரைச்சிப்பகுதியை தேனும் பாலும் ஓடும் இடமாக மாற்றுவாரெனவும் திரு குமாரசாமி கூறினார்.

# பிரிட்டனின் உதவி

கொழும்பு, சனி

இலங்கையில் சூறாவளியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுமுகமாக ரூ. 4 லட்சம் பெறுமதியான மருந்துவகைகளையும் கன்வெஸ் கூடாரங்களையும் நன்கொடையாக வழங்க பிரிட்டன் முன்வந்துள்ளது. இவற்றை ஏற்றிவரும் ரோயல் விமானப்படையைச் சேர்ந்த இரு விமானங்களும் நாளை கொழும்பு வந்து சேரும்.

—

கிரிக்கெட்

# 3-வது டெஸ்ட் நடைபெறவில்லை

அகமதாபாத், ஜன. 2

இலங்கை கோஷ்டிக்கும் இந்திய கிரிக்கெட் போர்ட் பிரசிடெண்ட் கோஷ்டிக்குமிடையே இன்று இங்கு நடைபெறவிருந்த மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட்போட்டி கடும் மழை காரணமாக நடைபெறவில்லை.

—

# மாவு தட்டுப்பாடு இவ்வாரத்தில் நீங்கும்

மாவிட்டபுரம், சனி

கோதுமை மாவுக்கு யாழ்ப்பாணத்திலும் சுற்றுப்புறங்களிலும் மிகுந்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒரு ரூத்தல் மா இங்கு பல இடங்களில் முப்பது சதம் முதல் ஐம்பது சதம்வரை விற்பனை செய்யப்படுகிறது. கூட்டுறவுக்கடைகளிலும் மற்றும் சில்லறைக்கடைகளிலும் மாவுக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் தான் மாவின் விலை உயர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக உணவுக் கட்டுப்பாட்டு இலாகாவைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவிக்கையில் யாழ்ப்பாணத்தில் மாவு கையிருப்பு மிகவும் குறைந்துள்ளதென்றும் இதன் காரணமாக தேவைப்படும் கடைகளுக்கும் கூட்டுறவுப் பண்டசாலைகளுக்கும் குறைந்த தொகை மாவே கொடுக்கப்படுகிறதென்றும் கூறினார்.

அண்மையில் வீசிய சூறாவளி காரணமாக போக்குவரத்துத் தடைகள் ஏற்பட்டதால் கொழும்பிலிருந்து மாவு இங்கு கொண்டுவரமுடியவில்லை என்றும் அநேகமாக இந்தவாரத்துக்குள் நிலைமை திருந்திவிடுமென்றும் அந்த அதிகாரி கூறினார்.

# மயிலிட்டி முன்னேற்றத்தில் அரசாங்க அதிபர் அக்கறை

## குளிர்சாதன இயந்திரத்துடன் பல வசதிகளும் கிடைக்குமென உறுதி

நல்லூர், ஞாயிறு

பல வருடங்களாகப் பலராலும் மயிலிட்டியில் குளிர்சாதன இயந்திர வசதி அமைக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளை சூறாவளியின் விளைவாக மயிலிட்டியில் நிறைவேற்றிக்கொடுக்க வேண்டுமென அரசாங்கத்திடம் வடமாகாண அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா வற்புறுத்தியுள்ளார்.

மயிலிட்டி மக்களுக்குப் புனர்வாழ்வு கிட்டும் வரை அவர்களை பஞ்சம், துன்பம் என்பன அணுகாமல் பார்த்துக்கொள்வதெனவும் அதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதென்றும் திரு. ஜெயவீரா அறிவித்துள்ளார்.

வலி வடக்கு காரியாதிகாரி திரு டி முருகேசம்பிள்ளை தலைமையில் மயிலிட்டிப் பொது மக்களிற்சிலர் அரசாங்க அதிபரிடம் சென்று தமது எதிர்கால வாழ்வைபற்றிய பேச்சுக்கள் நடத்தினர். தூதுகோஷ்டியினருக்கு திரு. நெவில் ஜெயவீரா பதிலளித்துப்பேசியதாவது:

கடந்த 25 ஆண்டுகளாக மயிலிட்டி கடல் தொழிலில் அடைந்திருந்த முன்னேற்றம் முற்றாக அழிந்துபோய் விட்டது இப்போது ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிறநாட்டினரின் உதவியுடன் நவீனமான முறையில் இத் தொழிலை மாற்றியமைக்க முடிவு செய்திருக்கிறேன். எனது திட்டப்படி மயிலிட்டிக் கிராமம் இழந்த வள்ளங்கள், இயந்திரங்கள், வலைகள், உபகரணங்கள் ஒவ்வொன்றினையு நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளமுடியும். பிறநாட்டினர் இவ்விஷயமாக நமக்கு அளிக்கும் நன்கொடைகளை உபயோகித்து முன்னர் இயந்திர வள்ளங்கள் வைத்திருந்தவர்களுக்குக் கூட இவற்றை வழங்கமுடியும்.

மயிலிட்டியில் குளிர் சாதன இயந்திர வசதியை ஏற்படுத்தி அவற்றைத் திருப்தியாகச் செயல் முறைகளுக்குக்கொண்டுவர பிறநாட்டினரின் உதவி பயன் படுத்தப்படும். முன்னர் ஒருபோதும் கிடைக்காத முன்னேற்றத்தை சில ஆண்டுகளில் மயிலிட்டி பெற்றுக்கொள்வதற்கான சகல உதவிகளையும் அரசாங்கம் செய்யும்.

### அரசாங்க அதிபருக்கு பாராட்டு

மயிலிட்டி மக்களுக்கு ஏற்பட்டகஷ்ட நஷ்டங்களை நேரில் கண்டு ஆறுதலளித்துச் செல்ல கவர்னர் ஜெனரலை வருவித்தமைக்காக அரசாங்க அதிபருக்கு இத்தூது கோஷ்டியினர் விசேஷ பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டனர்.

—

# ஈழத்து எழுத்தாளர் படைப்பு

## ரஷ்யாவில் வெளியீடு

மாஸ்கோ, ஜன 2

ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுதியொன்று ரஷ்யாவில் வெளியிடப்பட்டுள்ளது.

'தேயிலையின் நிறம்' என்ற தலைப்பில்வெளியிடப்பட்டுள்ள இந்த சிறுகதைத் தொகுதியில் 11 தமிழ் சிங்கள எழுத்தாளர்களின் சிறுகதைகள் அடங்கியுள்ளன

# 15 மீனவர் கண்டுபிடிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சமீபத்தில் வீசிய சூறாவளியினால் காணாமற்போன மீனவர்களில் 15 பேர் தொண்டி என்னுமிடத்தில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

—

# ஸ்ரீமா அனுதாபம்

கொழும்பு, சனி

தென்னிந்தியாவில்ஏற்பட்ட புயல், கடல் கொந்தளிப்பு காரணமாக விளைந்த சேதங்கள் குறித்து பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரிக்கு அனுதாபச்செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

—

# திருக்கோணமலையில் மின்சாரம் இல்லை

திருக்கோணமலை, சனி

சூறாவளியினால் தடைப்பட்ட மின்சாரம் திருக்கோணமலையில் மீண்டும் சீராவதற்கு சுமார் நான்கு மதங்களாகலாமென்று கருதப்படுகிறது மின்சார விநியோகத்துக்கு புதிதாகவே சகல ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டிய அளவுக்கு மின்சாரக் கம்பிகளும் கம்பங்களும் சேதமடைந்துள்ளன.

கடல் கொந்தளிப்பினால் திருமலைத் துறைமுகத்திற்குள் நீரில் அமிழ்ந்திய 'கொட்டியா' என்ற கப்பலின் மேல் நுனிப் பாய்மரம் மட்டுமே நீருக்கு மேல் தெரிகிறது. அக்கப்பலை வெளியே எடுப்பதற்கானமீட்பு வேலைகளில் கடற்படையினர் சென்ற சில தினங்களாக ஈடுபட்டுள்ளனர்.

துறைமுகத்தில் தேயிலை ஏற்றுமதி விநியோக ஸ்தாபனத்தைச் சேர்ந்த 60 மோட்டார் படகுகள் முற்றாகச் சேதமடைந்து விட்டதாகவும் 60 மீன்பிடி யந்திர வள்ளங்கள் காணாமற்போய்விட்டதாகவும் அறியப்படுகிறது.

### தேயிலை சேதம்

நியூஸிலந்துக்கு அனுப்பப்படவிருந்த முப்பதினாயிரம் ரூபாய் பெறுமதியான தேயிலையும்கியூஸிலந்திலிருந்து வந்திருந்தபதினாயிரம் ரூபாய் பெறுமதியான சரக்குகளும் சேதமடைந்தன.

### 22 பேர் மாண்டனர்

அன்புவழிபுரத்தில் ஏழு குழந்தைகளுட்பட திருக்கோணமலையில் இதுவரை 22 பேர் சூறாவளிக்குப் பலியாகியுள்ளனர்.

### 50 பேர் கைதாகி பிணையில் விடுதலை

சூறாவளியினால் கஷ்டமடைந்த மக்களிடம் எஞ்சியுள்ளவைகளையும் கொள்ளையடிப்பதில் கொள்ளைக் கோஷ்டியொன்று ஈடுபட்டுள்ளது. இதுவரை 50 பேர் கைதாகி பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். ஆறு பிள்ளைகளின் தந்தையொருவர் தம்மிடம் எஞ்சியிருந்த கந்தல் துணிகள் கூட கொள்ளைபோய் விட்டதென கலங்கியபடியே கூறினார்.

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் ஒரு வாரம் இலவச ரேஷன் வழங்குமாறு திருக்கோணமலை முன்னாள் எம். பி. திரு. எஸ். எம். மாணிக்கராசா அரசாங்கத்தை கேட்டுள்ளார்.

# சூறாவளி அச்சம் ஓரளவு நீங்கியது

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கையின் வட-கிழக்கு கரையோரங்களிலிருந்து 150-200 மைல்களுக்கு அப்பால் ஏற்பட்ட காற்று அமுக்கம் பலவீனமடைந்து விட்டதாக கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீண்டும் கடுமையான புயல் வீசலாமெனக் கொண்டிருந்த அச்சம் நீங்கியுள்ளதாகக் கருதப்படுகிறது.

### முற்றாக நீங்கவில்லை

இந்தியாவிலிருந்து நேற்று வெளியாகிய செய்தி, வங்காள விரிகுடாவுக்கப்பால் காற்றமுக்கம் முற்றாக இன்னும்நீங்கவில்லையென்றும் இதனால் நிலைமைபற்றி உறுதியாக எதுவும் தெரிவிக்க முடியாதெனவும் தெரிவித்துள்ளது. தனுஷ்கோடி மற்றும் தமிழ்நாட்டின் சில பகுதிகளில் கடும்மழை அடுத்த 24 மணி நேரத்தில் இருக்குமெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

# இந்திய அரசாங்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைமேற்கொண்டனர். என்று தமது அறிக்கையில் திரு. நந்தா தெரிவித்துள்ளார்"

1962-ல் இந்தியாவை சீனா தாக்கியபொழுது. இடதுசாரி கம்யூனிஸ்டுகள் தனித்து நின்றார்கள் அந்தக் கட்டத்தில் இவர்களின் உதவி கொண்டு பெரும் யுத்தம் தொடுக்க சீனா விரும்பியது. ஆனால் அந்த நேரத்தில் இது சரிவரவில்லை. இதன் பின்னர் பீகிங் ஆதரவுடனும் செல்வாக்குடனும் புதிய கட்சியொன்றை இவர்கள் இங்கு ஆரம்பித்தனர். ஏராளமான அந்நிய பிரசுரங்களை, சீன ஆதரவு துண்டுப் பிரசுரங்களை இவர்கள் இங்கு விநியோகம் செய்தனர் இப்படியான ஒரு நெருக்கடி உள்நாட்டில் உருவாகிவருவதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தீவிரமான ஆலோசனைக்குப் பின்னரே இந்த நடவடிக்கையில் இறங்கினோம்" என்றும் திரு நந்தா தெரிவித்துள்ளார்.

பெருமளவிலான சீன அபாயம் தொடர்ந்து இருந்துவருகிறது என்று எச்சரித்த திரு நந்தா இடதுசாரி கம்யூனிஸ்டுகளை கைதுசெய்து இப்படியான நடவடிக்கையில் இறங்கியிருக்காவிட்டால், [illegible] பட்டிருக்கும் என்றும் தெரிவித்தார்.

# சூறாவளி கஷ்டநிவாரண நிதி

(1-ம் பக்க தொடர்ச்சி)

| | |
|---|---|
| கே. அம்பலவாணர் வெள்ளிவிலாஸ் யாழ்ப்பாணம் | 5 |
| எஸ். ரி. சின்னத்துரை லீலா ஸ்ரோர்ஸ் கொழும்பு | 50 |
| வி முருகேசு 15, 42-ம் ஒழுங்கை கொழும்பு | 50 |
| எஸ். குலேந்திரன் தம்பதிகள் பருத்தித்துறை | 12 |
| திருமதி கே தம்பாபிள்ளை சரவணை மேற்கு வேலணை | 5 |
| ஆர். ராஜேந்திரன் டிஸ்பென்சறி யாழ்ப்பாணம் | 5 |
| ஏ ரி சின்னத்துரை அரசாங்க ஆஸ்பத்திரி சாவகச்சேரி | 6 |
| ஓர் அன்பர் | 10 |
| ஓர் அன்பர் யாழ்ப்பாணம் | 10 |
| ந. நித்சிங்க சேனாதிராஜா மாதகல் | 10 |
| ஓர் அன்பர் | 10 |
| எஸ். செல்லத்துரை குமரகோட்டம் கோண்டாவில் | 5 |
| டாக்டர் கே. சோமசுந்தரம் மெயின் வீதி யாழ்ப்பாணம் | 200 |
| டாக்டர் வி. ரி. பசுபதி கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 25 |
| தமிழ்ப்பண்ணை கே. கே. எஸ வீதி யாழ்ப்பாணம் | 10 |
| ராணித்தியேட்டர் மின்சார வீதி யாழ்ப்பாணம் | 101 |
| செல்வி விஜி. தியாகராஜா சண்டிக்குளிமகளிர் கல்லூரி யாழ்ப்பாணம் | 5 |
| ஓர் அன்பர் | 2 |
| வி. கே. சிவப்பிரகாசம் 258, நாவலர் வீதி யாழ்ப்பாணம் | 10 |
| எஸ். தியாகராஜா ஐயர் ஸ்டேஷன் வீதி யாழ்ப்பாணம் | 3 |
| எஸ். விக்னேஸ்வரன் வியாபாரி மூளாய் | 10 |
| வ. மூ. இரத்தினேஸ்வரன் நீராவியடி | 5 |
| கே. கனகநாயகம் 13 பசார் வீதி வவுனியா | 10 |
| செல்வி கமலாதேவி இரத்தினம் கருவம்பலை | 25 |
| எஸ. விஜயராஜா 41 கதிறுவலை பொலன்நறுவ | 10 |

தென்புலோலி மக்கள் முன்னேற்றக்கழகத்தினர் நிதிவசூலித்து ஈழநாடு சூறாவளி கஷ்ட நிவாரண நிதிக்கு வழங்கியுள்ளனர் வசூல் விபரம் திங்கட்கிழமை 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும்.

### சோப் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் மில்க்வைட் சோப் தயாரிப்பாளர்கள் ஈழநாடு சூறாவளி கஷ்ட நிவாரண நிதிக்கு இருநூற்றுக்கு மேற்பட்ட சவர்க்காரக் கட்டிகளைக் கொண்ட ஒரு பெட்டி சோப வழங்கியுள்ளனர்.

கைதடி வாசிகளிடமிருந்து திரு. த. வைகுந்தா, திரு. சு. ஜயேந்திரன், திரு. அ. சின்னையா ஆகியோர் 134 ரூபாய் திரட்டி இந்நிதிக்கு வழங்கியுள்ளனர். நிதி அளித்தோர் பெயர் விபரம் நாளை 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும்.

தேவை

சேலைகளுக்கு ரசல்ஸ் (குஞ்சம்) கட்ட நன்கு தெரிந்த பெண்மணிகள் உடன் தேவை. விபரங்கட்கு மின்சாரநிலைய வீதியில் உள்ள விக்னேஸ்வரா பிடவை மாளிகையில் 4-1-65 திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 1 மணிவரைக்குள் தெரிந்துகொள்ளலாம். (சகலவித தையல் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.) சு. சண்முகநாதன், புது ரோட், காரைநகர். 1397

ARROW'S Arrange Meals on Wheels Rooms Available for Boarders with All Facilities. Apply: The Manager, Arrow's, 355, Navalar Road Jaffna. 1400

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாருக்காக யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org